தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

# தமிழ் மரபுத் திணை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi




பிப்ரவரி – 2026

40

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின்

# தமிழ் மரபுத் திணை மாதாந்திர இதழ்

***Tamil Marabu Thinai***

தமிழ் மரபுத் திணை — 40

திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி

[பிப்ரவரி — 2026]

# தமிழ் மரபுத் திணை

ஆசிரியர்:
முனைவர் க. சுபாஷிணி
பொறுப்பாசிரியர்:
மரிய ஜெரின்

**Websites:**
https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

**Facebook:**
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar

**Youtube:**
https://www.youtube.com/thfichannel

**Instagram:**
https://instagram.com/TamilHeritageFoundation

**Twitter:**
https://twitter.com/HeritageTamil

**E-mail:** mythforg@gmail.com

**THFi - HQ:** Germany

**Branches:** India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

**Thinai Monthly Newsletter:**
https://thf-news.tamilheritage.org/category/thinai

ஆசிரியர் குழு :

1. முனைவர் க. சுபாஷிணி
2. முனைவர் தேமொழி
3. முனைவர் சிவ. இளங்கோ
4. முனைவர் கௌதம சன்னா
5. முனைவர் பக்தவத்சல பாரதி
6. முனைவர் கண்ணன் நாராயணன்

*Attribution-NonCommercial-ShareAlike*
*4.0 International (CC BY-NC-SA 4.0)*

~*~*~*~*~*~*

குறிப்பு:
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவின் வெளியீடு இது. இந்த நூல் தமிழ் ஆய்வுப்புலத்தின் தேவை கருதி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்நூலை மறுபதிப்பு செய்ய விரும்புவோர் அல்லது ஏதாவது ஒரு வகையில் தங்கள் படைப்புகளில் பயன்படுத்த விரும்புவோர் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பினைத் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று உசாத்துணைகளை வழங்கி மீள்பதிப்பு செய்யலாம்.
- தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவு

**இணையதள முகவரி:** https://tamilheritage.org

தமிழ் மரபுத் திணை இதழுக்குத் **தங்களுடைய படைப்புகளை** அனுப்ப விரும்புபவர்கள் தங்களுடைய வரலாறு, மொழியியல், தமிழ் இலக்கியம், சமூகவியல் மற்றும் மானிடவியல் பொருண்மைகளில் அமைந்த படைப்புகளை
editorthfjournal@gmail.com
என்ற **மின்னஞ்சல் முகவரி**க்கு அனுப்பி வைக்கலாம்.

# உள்ளடக்கம்


தலையங்கம்.......................................................................7

புத்தகங்கள் மாற்றத்திற்கு வழிவகுக்கும்...........11

1. வண்டின் சாறும் ஓரியன் விண்மீன் கூட்டமும் ..........................................................................................13

2. அற்றத்தால் தேறார் அறிவுடையார்..................21

3. இந்து அறநிலையத்துறை தேவையா? – I.......25

4. ஒள்ளெரி..........................................................................35

5. இந்து அறநிலையத்துறை தேவையா? – II.....45

6. மெக்காலே - பழமைவாதக் கல்வியின் பகைவன்: நூல் அறிமுகம்.....................................57

7. மணலூர் மணியம்மாள்: ஒரு வியப்பூட்டும் ஆளுமை...........................................................................65

8. இந்து அறநிலையத்துறை தேவையா? – III....70

9. குறுந்தொகை 109................................................83

10. இலக்கியத்தில் பொங்கல்................................93

11. வள்ளுவமும் எண்ணியலும்............................98

12. மயிலாப்பூரும் முஸ்லிம்களும்......................112

13. சங்ககாலப் பொன்மொழிகள்.......................118

14. கணிதமும் தமிழும்..........................................128

15. எல்லி: சொற்களின் சொல்............................144

16. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்ச்சிகள்.......151

க. அயலகத் தமிழர் தினம்..................................151

உ. புத்தகக் கண்காட்சி........................................157

ங. வாமனத் தீவு: நூல் அறிமுக விழா.............162

ச. இலக்குவனார் தமிழ்மணி விருது.............165

ரு. தனிநாயக அடிகளின் தமிழ்ப்பணி – பன்னாட்டுக்கருத்தரங்கு...................................167

சூ. அம்பேத்கரியம் 50 நூல்கள் வெளியீட்டு விழா...........................................................................169

17. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள். 173

க. இணையவழி திசைக்கூடல் நேரலைகள். 173

உ. இணையவழி இலக்கியக் கூடல் நேரலைகள்..............................................................174

# தலையங்கம்

— முனைவர் க. சுபாஷிணி

வணக்கம்.



தமிழ் மரபுத் திணை மாதாந்திர இதழ் வழி உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

காலத்திற்கு ஏற்ப மாற்றம் மனித சமூகத்திற்கு மிகவும் தேவையானது. அவ்வாறான மாற்றங்களில் நல்ல பழக்கவழக்கங்கள், தொடர்புகள், முன்னெடுப்புகள் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்கிறது.

கடந்தாண்டு செப்டம்பர் மாதம் முதல் தமிழ் மரபு அறக்கட்டளை இந்தோனேசியாவின் ஆசிய தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து தொடங்கிய தமிழ்ப் பள்ளி சார்ந்த முன்னெடுப்பு அயலகத் தமிழர் நாள் விழாவில் முதலமைச்சர் அவர்களால் பணி நியமன ஆணை பெற்றதன் மூலம் வெற்றிகரமாக நான்கு ஆசிரியர்கள் இந்தோனேசியா செல்வதற்கு வழி வகுத்து நமது முயற்சி நல்ல முறையில் வெற்றி கண்டிருக்கின்றது.

அயலகத் தமிழர் நாள் விழா மற்றும் அதனைத் தொடர்ந்து கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அனைத்துலக புத்தகக் கண்காட்சி உலகத் தமிழர்களை ஒன்றிணைத்து அறிஞர்கள் ஆய்வாளர்களுடன் நல்லதொரு தொடர்பினை ஏற்படுத்தி கருத்து பரிமாற்றங்களை மேற்கொள்ள ஒரு சிறப்பான வாய்பாக அமைந்து அறிவார்ந்த தமிழ் சமூகத்தைக் கட்டமைப்பதற்கு ஒரு அடிதளம் இட்டிருக்கிறது.

புத்தகங்களை தொடர்ந்து வாசிப்பது ஒரு சிறந்த பழக்கம் என்பதில் சந்தேகம் இல்லை. சொல்லப்போனால் நூல்கள் தாம் நம்மை செதுக்குகின்றன. தமிழர் வரலாற்றை தெரிந்து

கொள்ள ஆர்வம் இருப்பவர்கள் கட்டாயமாக நல்ல ஆய்வு நூல்களை வாங்கி வாசித்து பயன்பெறவேண்டும். அவ்வகையில் உங்களின் தமிழ் மரபு அறக்கட்டளை வரலாற்று நூல்களை எளிய வகையில் வாசித்து புரிந்து கொள்ளும் வகையில் வழங்குகின்றோம்.

ஜனவரி மாதத்தில் புத்தகங்கள் சார்ந்த நிகழ்வுகளில் தமிழ் மரபு அறக்கட்டளை அதிக பங்கு வகித்தது. இதில் ஒரு நிகழ்வாக சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழக மேனாள் தலைவர் திரு நா. ஆண்டியப்பன் அவர்கள் எழுதிய வாமனத் தீவு நூலைப் பற்றி தமிழ் சமூகத்திற்கு அறிமுகம் செய்ததில் எனக்கு மகிழ்ச்சி. பலவீனத்தை பலமாக மாற்றிய வரலாறுதான் சிங்கப்பூரின் வரலாறு என்பதைக் கூறும் நூல் வாமனத் தீவு. இவ்வாறான ஆய்வு நோக்கில் எழுதப்பட்ட வரலாறு சார்ந்த நூல்களை தமிழ்ச்சமூகம் அதிகம் வாசிக்க வேண்டும்.

ஜனவரி மாதயிறுதியில் முனைவர் கௌதம சன்னா அவர்களின் கடும் உழைப்பில் மூன்று ஆண்டுகள் காலகட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள அம்பேத்கரியம் 50 நூல்களின் தொகுப்பானது டாக்டர் அம்பேத்கரின் அனைத்து எழுத்துக்கள்

பேச்சுகள் உரைகள் ஆவணங்கள் என அனைத்தும் 50 நூல்களாக உயரிய தரத்தில் சிறப்பாக தொகுக்கப்பட்டு வெளியீடு கண்டது. இந்நிகழ்வைப் பற்றிய செய்திகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன. மேலும் பல கட்டுரைகளோடு நூல் திறனாய்வுகளும் நூல்கள் பற்றிய செய்திகளும் இவ்விதழைச் சிறப்பிக்கின்றன.

விரிவான நூல் வாசிப்பும் தரமான ஆய்வு சிந்தனையும் தமிழ்ச் சமூகத்தின் சிந்தனைப் போக்கிற்கு உரமாக அமையும். தொடர்ந்து வாசிப்போம், தமிழர் சிந்தனைக்கு வளம் சேர்ப்போம்! இதழின் இறுதியில் நம் தமிழ் மரபு அறக்கட்டளையின் நூல்கள் பட்டியல் இணைக்கப் பட்டுள்ளது. தமிழ்ப்பணியில் தொடர்ந்து செயலாற்றுவோம்.

**தமிழால் இணைவோம்!**

அன்புடன்
முனைவர் க சுபாஷிணி
தலைவர்
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

# புத்தகங்கள் மாற்றத்திற்கு வழிவகுக்கும்

— மரிய ஜெரின்



மாதாந்திர மின்னிதழாக வெளிவரும் தமிழ் மரபுத் திணை இதழ் வழியாக உங்களுடன் உரையாடுவதில் மகிழ்ச்சி.

புத்தகங்கள் மாற்றத்திற்கு வழிவகுக்கும். ஜனவரி மாதத்தில் நடைபெற்ற புத்தகத் திருவிழா மற்றும் புதிய வெளியீடுகள் தமிழ் அறிவுலகத்தை அடுத்தடுத்த இலக்குகளை நோக்கி நகர்த்தி சென்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தொடர்ந்து வாசிப்பதும் எழுதுவதும் அறிவை செம்மைப்படுத்துகிறது. எனவே இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ள இதழின் நான்காம் பக்கத்தில்

மின்னஞ்சல் முகவரி சேர்க்கப்பட்டுள்ளது. படைப்புகளை அனுப்ப விரும்புபவர்கள் வரலாறு, மொழியியல், தமிழ் இலக்கியம், சமூகவியல் மற்றும் மானிடவியல் பொருண்மைகளில் அமைந்த படைப்புகளை அனுப்பி வைக்கலாம்.


இவ்விதழில் சிறப்பம்சமாக வரலாறு, அறிவியல், நூலாய்வு மற்றும் சங்க இலக்கியத்தை புதிய கோணத்தில் பார்க்கும் அணுகுமுறை என கட்டுரைகள் இதழுக்கு வலுசேர்க்கின்றன. மேலும் நிகழ்ச்சிகள் சரிவர தொகுக்கப்பட்டு தமிழ் மரபு அறக்கட்டளையின் ஜனவரி மாத செயல்பாடுகளை வெளிப்படுத்துகிறது.

புதிதாக இவ்விதழில் ஒரு சிறிய மாற்றமாக அண்மையில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் சார்பில் வெளியிடப்பட்ட கொற்கை எழுத்துருவானது பயன்படுத்தப்பட்டிருக்குறது. இது இவ்விதழுக்கு மேலும் அழகு சேர்த்திருக்கிறது என்று நம்புகிறேன். நன்றி!

அன்புடன்
மரிய ஜெரின்
பொறுப்பாசிரியர்
தமிழ் மரபுத் திணை இதழ்

# 1. வண்டின் சாறும் ஓரியன் விண்மீன் கூட்டமும்

— முனைவர் தேமொழி




ஓரியன் என்பது வடக்கு அரைக்கோளத்தில் குளிர்காலத்தில் மிகத் தெளிவாகத் தெரியும் ஒரு முக்கிய விண்மீன் கூட்டமாகும். இது வான நடுக்கோட்டிற்கு அருகில் அமைந்திருப்பதால், உலகின் பெரும்பாலான பகுதிகளிலிருந்து இது தெரியும். எனவே உலகின் பலபகுதிகளிலும் இந்த விண்மீன் கூட்டம் குறித்த கதைகள் பல உள்ளன. எல்லாமே இந்த விண்மீன் கூட்டத்தை ஒரு போர் வீரனாகவோ, வேடனாகவோ,

தெய்வமாகவோ உருவகப்படுத்துவன. இரண்டாம் நூற்றாண்டின் வானியலாளர் டாலமியின் குறிப்புகள் முதற்கொண்டு, அமெரிக்க மாயன் மக்கள், கிரேக்கப் புராணங்கள், சுமேரியர்களின் தொன்மங்கள் எனக் காணக்கிடைக்கும் பண்டைய பதிவுகளிலும் ஓரியன் விண்மீன் கூட்டம் பற்றிய குறிப்புகள் உள்ளன. சுமேரியர்கள் ஓரியனை, கில்காமேஷ் ஒரு காளை (டாரஸ்/ரிஷபம்) உடன் சண்டையிடுவதாகக் கற்பனை செய்ததும் பதிவாகி உள்ளது. வானியலில் கிரேக்கர்கள் முதன்மை நிலையில் இருந்ததால் கிரேக்கப் புராண வேட்டைக்காரனான 'ஓரியன்' பெயரால் இது பெயரிடப்பட்டது. இந்தியாவில் இதைச் சிவனின் நடனமாகக் காண்கிறார்கள். கருவானில் வெண்புள்ளிகளாகத் தெரியும் விண்மீன் புள்ளிகளை அவரவர் கற்பனைப்படி இணைத்து வடிவம் கொடுப்பதும் அவற்றுக்குக் கதைகள் சொல்லி விளக்கம் கூறுவதும் மக்களின் கற்பனை வளத்திற்குச் சான்று, கற்பனைக்கு ஏது கட்டுப்பாடு.

இரவு வானத்தில் ஒளிரும் ஓரியனின் ஒளிமிக்க ஏழு விண்மீன்களில் நான்கு நட்சத்திரங்கள் – பீட்டல்ஜியூஸ், பெல்லாட்ரிக்ஸ், ரிகல் மற்றும்

சைப் (*Betelgeuse, Bellatrix, Rigel and Saiph*) ஆகியன தோராயமாக ஒரு பெரிய, செவ்வக வடிவத்தை உருவாக்குகின்றன, அதன் மையத்தில் ஓரியனின் இடைவார் (Orion's Belt) பகுதியில் மூன்று நட்சத்திரங்கள் – அல்னிடக், அல்நிலம் மற்றும் மின்டகா (Alnitak, Alnilam, and Mintaka) உள்ளன. வீரனின் தலையில் மெய்சா (Meissa) எனப்படும் கூடுதல் எட்டாவது விண்மீன் ஒன்றும் உள்ளது.





இவற்றில் பீட்டல்ஜியூஸ் விண்மீன் ஆல்பா ஓரியோனிஸ் என்றும் அழைக்கப்படும், இந்தியர்களால் ஆருத்ரா என்றும் தமிழில் 'திருவாதிரை' என்றும் அழைக்கப்படும் இந்தப் பெரிய சிவப்பு விண்மீன் ஓரியன் கூட்டத்தில் இரண்டாவது ஒளிமிக்க விண்மீன். இது

புவியிலிருந்து 640 ஒளியாண்டுகளுக்கு அப்பால் (1 ஒளியாண்டு = 10 லட்சம் கோடி கிமீ) உள்ளது. பீட்டல்ஜியூஸ் என்பது அரேபியா சொல்லான yad al–jauzā' (the Hand of al–Jauzā' / hand of Orion) ஓரியனின் கையின் தோள் பகுதியில் உள்ளது என்ற பொருளில் கூறப்பட்டது. இடைக்காலத்தில் y என்பதை எடுத்து எழுதும் பொழுது b என மாற்றியதில் Betelgeuse ஆனது. இந்த விண்மீன் பின்னணி கொண்ட திரைப்படம் ஒன்று 1988 இல் உருவாக்கப் பட்டபொழுது எளிய விளம்பர உத்தியாக; Betelgeuse என்பதன் உச்சரிப்பு Beetlejuice, பீட்டல்ஜியூஸ் என்று ஒளிப்பதைக் கருத்தில் கொண்டு மாற்றியதில் வீரனின் கை என்பது 'வண்டின் சாறு' என்று பொருள் தரும் வகையில் எதிர்பாராமல் அமைந்துவிட்டது.

உலகில் பல பண்பாட்டினர் ஓரியன் விண்மீன் கூட்டத்தைப் போரிடும் வீரனாகக் கற்பனை செய்திருக்க இந்தியர்கள் சிவனின் நடனமாகக் கற்பனை செய்துள்ளனர். வேதத்தில் சிவன் குறித்த குறிப்பு இல்லை என்பதையும், சிவனின் புராணக் கதைகள் பிற்காலத்தில் உருவானவை என்பதையும், அத்துடன் சிவனின் நாட்டியக் கோலம் கொண்ட உருவங்களும் காலத்தால் பிற்பட்டவை என்பதையும் கருத்தில் கொள்ள

வேண்டும். பல்லவ அரசரான முதலாம் மகேந்திரரின் (7 ஆம் நூற்றாண்டு) சீயமங்கலம் அவனிபாஜனம் குடைவரையிலேயே இன்று நாம் பரவலாக அறியும் சிவனின் இடக்கால் தூக்கி ஆடும் நடனக் கோலம் முதன்முதலாகச் சிற்பமாகக் காணப்படுகிறது.






எனவே, இந்தக் கற்பனை சற்றொப்ப ஆறாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஆரியப்பட்டர் வராகமிகிரர் காலத்திற்குப் பின்னர் எனவும் கொள்ளலாம், இதில் கிரேக்க வானியலின் தாக்கம் உள்ளது என்பதையும் புரிந்து கொள்ளலாம். இந்த ஓரியன் விண்மீன் கூட்டத்திற்குக் கீழே/தெற்கே 'லெபஸ்' விண்மீன் கூட்டம் (*Lepus constellation*) உள்ளது. லெபஸ் என்பதற்கு இலத்தீன் மொழியில் 'முயல்' என்பது பொருள். இதுவே சிவனின் காலில் மிதிபடும்

முயலகன் என்ற அரக்கன். முயலகன் அசுரன் குறித்தும் தொன்மக் கதைகள் புனையப்பட்டன. இருப்பினும் முயலகனாக உருவகித்ததின் பின்னணி கிரக்க வானியலின் தாக்கத்தைக் காட்டிக் கொடுத்துவிடுகிறது.






*https://www.researchgate.net/figure/Orion-and-Cosmic-Dance_fig2_354372088*

சிவன் கையில் தழல் (நெருப்பு) இருப்பது, அவரது அழிக்கும் சக்தி மற்றும் படைக்கும் ஆற்றல் இரண்டையும் குறிக்கிறது என்று கூறப்படுகிறது. வானின் விண்மீன் கூட்டத்தை சிவனின் நடனமாகக் காண விரும்பியவர்கள்

சற்றே கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்து, தழல் வலக்கையில் இருப்பதாகக் காட்டி இருந்தால் அதைச் செந்நிறத்தில் ஒளிரும் திருவாதிரை விண்மீன் எனக் கூறியிருக்கலாம் என்று தோன்றுகிறது. ரிஷபம் விண்மீன் கூட்டமும் அருகிலேயே இருக்கும் நிலையில் சிவனுக்கு காளையை ஊர்தியாக்கியதையும் மீளாய்வு செய்ய வேண்டியுள்ளது.

இந்திய வானியலில் ஒவ்வொரு முழுநிலவு நாளுடனும் இணைந்து வரும் விண்மீன்கள் நாளில் விழாக்கள் கொண்டாடப்படுவது பண்டைய நாளிலிருந்து வழமை, குளிர்கால மார்கழித் திங்களின் முழு நிலவுநாளில் திருவாதிரை விண்மீன் இணைந்துவரும் நாள் சிறப்பாகக் கொண்டாடப் படுவது வழக்கம் (அடுத்த முழுநிலவு நாளில் வருவது தைப்பூச விழா நாள், சித்திரைத் திங்கள் சித்திரை நாள் என்பதும் அவ்வாறே).

# 2. அற்றத்தால் தேறார் அறிவுடையார்

— யாழ்க்கோ

தகுதியும் திறமையும் இருந்தால் போட்டித் தேர்வில் வெற்றி பெறலாம்; பொதுப்பணியாற்றலாம்; மாத வருமானத்தில் குடும்பத்தை மகிழ்விக்கலாம் என்ற எண்ணம் ஒவ்வோர் இளைஞர் நெஞ்சத்திலும் பஞ்சமில்லாமல் பரவிக்கிடக்கின்றன. அடிப்படைப் பணி முதல் ஆளுமைப் பணி வரை எத்தேர்விலும் அறிவுக்கு ஏற்பிசைவு உண்டு என்ற நம்பிக்கையில் போட்டித் தேர்வுகளில் பங்கேற்கின்றனர். தேர்வு நேர்மையாக நடைபெற்று, அதனால் திறமையானவன் தேர்ச்சி பெற்றால், அறிவின் விளைவால் உள்ளம் மகிழ்வான்; உயர்ச்சியடைவான். தேர்வு நிகழ்வில் அன்பாலும், ஆசையாலும் முறைகேடுகள் மூக்கை நுழைக்கும்போது, தகுதியானவன் தகுதியிழக்கின்றான்; தகுதியற்ற அறிவிலியோ தேர்ச்சி பெறுகிறான். இப்படிப்பட்ட அறிவிலிகள் இருக்கையில் அமர்ந்தால் இழிசெயல் செய்வர்; இன்னல் கொடுப்பர்.

அறிவற்றவர்களையும் மந்தர்களையும் அவர்கள் மீது கொண்டுள்ள அன்பு காரணமாகப் பதவியில் அமர்த்துவது பயனற்ற விளைவுகளையே தரும். தகுதி திறமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பணித் தேர்வு நடைபெற வேண்டும். தேர்வுக்குப் போட்டியிடுவர்கள் தங்கள் உறவினர்கள் என்றோ, நண்பர்கள் என்றோ கருதி அவர்களை பணிக்கு அமர்த்தக் கூடாது. அவ்வாறு தங்களுக்கு வேண்டியவர் என்று திறமையில்லாத நபரை பணியமர்த்தினால் ஏற்படும் அறியாமையின் விளைவு யாவற்றையும் நியமித்தவர் துய்த்தே ஆகவேண்டும். இதனை வள்ளுவர்,

*காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்*
*பேதைமை எல்லாந் தரும்.*

என்று உயர்வழியைப் பின்பற்ற நற்கருத்தை நவின்றுள்ளார்.

கருடன் மீது ஏறி வீற்றிருப்பவரும், உலகத்தைத் தாவியளந்த பெருமை பொருந்தியவருமான திருமாலே யாயினும், நல்லதோ கெட்டதோ தனக்கு ஊதியந்தரும் சீரிய செயலை மட்டுமே

செய்வர். ஆகையால், யாரையும் நம்பாமலும், உறவினர், நட்பினர் என்று பாராமலும் அறிவிற் சிறந்த ஒருவரை தேர்ந்தெடுத்துப் பணியமர்த்த வேண்டும் என்று கீழ்வரும் பழமொழிப் பாடலும் உய்த்து உணர வைக்கின்றது.

*சுற்றத்தார் நட்டார் எனச்சென் றொருவரை*
*அற்றத்தால் தேறார் அறிவுடையார் —*
*கொற்றப்புள்*
*ஊர்ந்துலகம் தாவின அண்ணலே யாயினும்*
*சீர்ந்தது செய்யாதா ரில்*

எனவே, அறியாமையுடையாரைத் தேர்வு செய்தலும், கைகூடாத பொருள்களின்மேல் அன்பு செலுத்துதலும் பேதைமையாகும் என்பது போதரும்.

சில புலிகளின் முகம் மான் போலத் தோற்றமளிக்கும். சில மான்களோ புலிகளின் முகம் போன்ற தோற்றமளிக்கும். இந்த இயற்கையான உருமாற்றத்தால் வெளித்தோற்றத்தைக் கண்டு நம்புவது அபாயகரமாகும் என்கிறது இந்து மதம்.

உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருட்களை, அவற்றை உரியவர்களிடம் திருப்பிக் கொடுக்குமாறு அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்; மேலும், நீங்கள் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் தீர்ப்பளிக்கும் போது, நீதிநெறியுடன் தீர்ப்பளிக்க வேண்டும் (அல்குர்ஆன்: 4:58).

மனிதர்கள் வெளிப்புறத் தோற்றம், உயரம், உடல் அழகு போன்றவற்றைப் பார்க்கிறார்கள். இயேசு ஒருவரின் அகத்திலுள்ள குணங்கள், எண்ணங்கள், நோக்கங்கள் ஆகியவற்றைப் பார்க்கிறார் (1 சாமுவேல் 16:7). ஒருவரின் உண்மையான மதிப்பு வெளிப்புறத் தோற்றத்தில் இல்லை; இதயத்தில் உள்ள தூய்மையிலும், குணத்திலும், அறிவிலும், திறமையிலும் தான் உள்ளது என்பதை இயேசு உணர்த்துகின்றார்.

தேர்வு முறையில் தூய நிலைப்பாடு வேண்டும் என்பதை மும்மதமும் தமிழறமும் எக்காலத்திற்கும் பொருந்தும்படி எடுத்துரைக்கின்றன.

# 3. இந்து அறநிலையத்துறை தேவையா? – I

— முனைவர் சிவ இளங்கோ

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து, இந்தியாவை ஆளும் பொறுப்பை, 1858 ஆம் ஆண்டு, பிரிட்டிஷ் மன்னராட்சி அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. முதலாவதாக, இந்தியர்களின் மத விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. இது, "இந்திய மக்களுக்கு அளிக்கப்பட்ட பரிசு" என்று இங்கிலாந்து மகாராணியார் இக்கொள்கையை அறிவித்தார்.

இதற்கு 57 ஆண்டுகளுக்குப் பிறகு அக்கொள்கையைப் பிரிட்டிஷ் அரசு கைவிட நேர்ந்தது. இதற்குக் காரணம் 1925 ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாண அரசாங்கம் நிறைவேற்றிய இந்து அறநிலையத்துறைச் சட்டம்தான். இந்தச் சட்டத்தை அன்று சென்னை மாகாணத்தின் சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்றியவர்கள் ஜஸ்டிஸ் பார்ட்டி என்று அழைக்கப்பட்ட நீதிக் கட்சியினர்.



ஆரணி அருகே உள்ள திருமலை சமணர் கோயில் 'அருகந்தகிரி சமண மடம்' – திருவண்ணாமலை மாவட்டம்

தென்னிந்தியாவில் களப்பிரர் ஆட்சிக் காலம் வரை (கி.பி. 300–550) கோயில்கள் என்று எதுவும் இல்லை. (ஜைன) சமணப் பள்ளிகளும், பௌத்த விகாரைகளும், ஆசீவக மடங்களும் தான் இருந்தன. இவற்றில் சமணத் தீர்த்தங்கரர்கள், புத்தர்களின் சிலைகள் நிறுவப் பட்டாலும் உருவ வழிபாடு நடைமுறையில் இல்லை. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தென்னிந்தியாவின் வடக்குப்

பகுதியில் இருந்த பல்லவர்கள் ஏற்றம் பெற்றனர். மெல்ல மெல்ல, பல பகுதிகளிலும் பல்லவரது ஆட்சி அமைந்தது.

பல்லவர்களுடைய ஆட்சிக்காலத்தின் போதுதான் பார்ப்பனர்களின் உள்நுழைவும் அதிகமாக ஏற்பட்டது. அப்போதிலிருந்து தொடங்கிய சமண, பௌத்த சமயங்களுக்கு எதிரான களம், பக்தி இலக்கியக் காலத்தில் பெரிய அளவில் வளர்ந்தது. சமண, பௌத்தப் பள்ளிகளும், மடங்களும் சைவ, வைணவ சமயத்தினர் என்று சொல்லிக் கொண்டவர்களால் கைப்பற்றப்பட்டுக் கோவில்களாக மாற்றப்பட்டன. ஏற்கனவே கற்பனையில் இருந்த கடவுள்களுக்கு உருவம் கொடுத்து அதற்கு வழிபாடுகளும் நடத்தத் தொடங்கிவிட்டனர்.


பல்லவர் ஆட்சிக் காலத்தில் தமிழகம் பார்ப்பனிய மயமாகிக் கொண்டிருந்தது. தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் எதிரான செயல்கள் மெல்ல மெல்ல அரசின் நடைமுறைகள் ஆகத் தொடங்கின. பக்தி இலக்கியக் காலத்தில் தமிழுக்கு முன்னுரிமை கிடைத்தாலும், கற்பனைப் புராணக் கதைகளும், மூடநம்பிக்கைச் செயல்களும் மக்களைக் குழப்பி வந்தன.

பல்லவர்களுக்குப் பிறகு வந்த பிற்காலச் சோழர்கள் (கி.பி. 9 – 12), பிற்காலப் பாண்டியர்கள் (கி.பி. 13 – 15) ஆட்சிக் காலங்களிலும் இதே நிலையே நீடித்தது. சமயங்கள் சைவம், வைணவம், சாக்தேயம் (சக்தி), காணபத்யம் (கணபதி), கௌமாரம் (முருகன்), சௌரவம் (ஞாயிறு) என்று சன்மார்க்கமாக (ஆறு மார்க்கங்களாக) வளர்ச்சிநிலை பெற்றன.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டு தொடங்கிய விஜயநகரப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டின் அனைத்துக் கோயில்களிலும் பார்ப்பனர் ஆதிக்கம் உறுதிப்படுத்தப்பட்டு, கோவில்கள், மன்னர்களின் வழியாகப் பார்ப்பனர் வசம் கொண்டு வரப்பட்டன. இதே காலத்தில் ஐரோப்பியர் வருகைகளும் நிகழ்ந்தன.

அதிகாரம் இல்லாத மன்னர்கள் காலத்துக் கோவில்களில் பார்ப்பனர்களின் கொள்ளையும், ஊழல்களும் அதிகரிக்கவே, பக்தர்களின் வேண்டுகோளை ஏற்றுப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியரின் ஆட்சிக் காலத்தில், கி.பி. 1817 ஆம் ஆண்டு முதல்,

அரசாங்கம் தனது வருவாய்த்துறை மூலம், கோயில் அறக்கட்டளைகளை நிர்வகிக்கத் தொடங்கியது.




1858 ஆம் ஆண்டில் கம்பெனி ஆட்சி முடிவுக்கு வந்து, பிரிட்டிஷ் மன்னராட்சி நிர்வாகம் ஏற்பட்டபோது, மதத்தில் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. அதன்படி 'மத அறக்கட்டளைகள் சட்டம் 1863' (The Religious Endowment Act, 1863) சட்டம் இயற்றப்பட்டுக் கோயில்கள் மீண்டும் கொள்ளையர் (பார்ப்பனர்) வசமாயின.

தமிழ் மன்னர்கள் கட்டி வைத்த கோவில்களில், பார்ப்பனர்கள் உள்நுழைந்து, தங்கு தடையின்றிச் செய்த கொள்ளைகளும், ஊழல்களும் உண்மையான பக்தர்களின் மனதைப் புண்படுத்தவே, அவர்கள் பல்வேறு கால கட்டங்களில் (1874, 1876, 1884, 1894) அரசாங்கத்திடம் முறையிட்டனர். அரசாங்கம் தன்

தலையிடாக் கொள்கையின் விளைவாகக் கோயில் கண்காணிப்புக் குழுக்களை மட்டுமே நியமித்தது. ஆனால், இதனையும் பார்ப்பனர்கள் ஏற்கவில்லை.

பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்த கண்காணிப்புக் குழுவைப் பார்ப்பனர்கள் ஏற்காத நிலையில், பார்ப்பனர்களின் கோவில் கொள்ளைகளைக் கட்டுப்படுத்தக் கோரி, 1905 ஆம் ஆண்டு பெல்லாரியில் நடந்த சென்னை மாகாண மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் என்னாவது என்ற பயத்தில் பார்ப்பனர்களே, 1907 இல் 'தரும இரட்சண சபா' என்னும் அமைப்பைத் தொடங்கி, கோயில்களின் நிதி மோசடிகளை ஆய்வு செய்து நீதிமன்றத்தில் முறையிட்டனர்.

முறையிடுவதும் பார்ப்பனர்; வழக்கு நடத்துவதும், எதிர்வாதம் செய்வதும் பார்ப்பனர்; தீர்ப்பு வழங்குவதும் பார்ப்பனர். இதன் விளைவு? கோவில் அறக்கட்டளைகளில் இருந்த பார்ப்பனர் அல்லாதார் வெளியேற்றப்பட்டு, முழுவதும் பார்ப்பனர்களே நிர்வகிக்கும் (கொள்ளையடிக்கும்) நிலை ஏற்பட்டது. கோவில் முறைகேடுகள் குறித்து யாரேனும்


நீதிமன்றங்களை அணுகினால் 'திட்ட வழக்குகள்' (ஸ்கீம் சூட்டுகள் – *scheme suits*) மூலம் தாங்கள் விரும்பும் திட்டங்களைப் பெற்றுத் தாங்கள் செய்யும் முறைகேடான செயல்களுக்கு சட்ட அங்கீகாரம் பெற்று வந்தனர்.

இந்நிலை குறித்து அன்றைய சென்னை நாளிதழான "மெட்ராஸ் மெயில்" தனது தலையங்கத்தில் இப்படி எழுதியது: "மத விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று பிரிட்டிஷ் அரசு வெளிப்படையாக அறிவித்துள்ளதைப் பின்பற்றி வருகிறது. ஆனால், கோவில்களின் அறங்காவல் குழுவினரின் நடைமுறை மனநிறைவு தருவதாக இல்லை. அவர்கள் செய்கிற தவறுகளால் அந்த நிர்வாகங்கள் அதிகமாகக் கண்காணிக்கும் படியான நிலைக்கு ஆளாகியுள்ளன. பெரும்பாலான அறக்குழுக்களின் நிர்வாகச் சீர்கேடுகளும், மோசடிகளும் மிகவும் இழிவாக இருக்கின்றன" என்று குறிப்பிட்டது அப்பத்திரிகை (மெட்ராஸ் மெயில், 13. 1. 1920).

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் இந்தியாவில் மன்னர் ஆட்சியே நிலவி வந்தது. மக்கள் பங்கெடுக்கும் தேர்தல் அரசியல் முறை

இல்லாத அக்காலத்தில், இந்தியாவில் மக்களாட்சி முறையை அறிமுகப்படுத்தும் நோக்கில், ஒரு சீர்திருத்த முறை 1919 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தம் என்று அது அழைக்கப்பட்டது.

மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டத்தின் விளைவாக, மாகாணங்களிலும் சட்டமன்றம் ஏற்படுத்தப்பட்டு இரட்டை ஆட்சி முறை நடைமுறைக்கு வந்தது. அதன் அடிப்படையில் 1920 ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்று அமைச்சரவையை அமைத்தது. இந்த நீதிக்கட்சி, தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக, 1916 ஆம் ஆண்டு தான் சென்னையில் தோற்றம் பெற்றது.




பிரிட்டிஷ் ஆட்சியில் நிர்வாகம், நீதிமன்றம், கோயில்கள், வணிகம் என்று அனைத்துத்

துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டு இருந்த பார்ப்பனர்களைப் போல், பார்ப்பனர் அல்லாதவர்களுக்கும் வாய்ப்புகள் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் தொடங்கப்பட்டது தான் தென்னிந்திய நல உரிமைச் சங்கம். இவ் வியக்கத்தின் பிரச்சார ஊடகமாக ஜஸ்டிஸ் (Justice) என்ற பத்திரிகை தொடங்கப்பட்டு நாளடைவில் அந்தப் பேரிலேயே அது ஜஸ்டிஸ் பார்ட்டி (Justice Party) என்று அழைக்கப்பட்டது. அதுவே தமிழில் நீதிக்கட்சி என வழங்கலாயிற்று.

நீதிக்கட்சி தொடங்கப் பட்டதற்கும், பெரியாருக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. (1938 ஆம் ஆண்டில், முதலாம் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டு எர்ரவாடா சிறையிலிருந்த போதுதான், பெரியார், நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு, 1944 ஆம் ஆண்டு வரை அப்பொறுப்பில் இருந்தார்).

நீதிக்கட்சியில் எல்லாருமே பழுத்த பக்திமான்கள் ஆகவே இருந்தனர். கோவில்களில் பார்ப்பனர்களின் அட்டூழியங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாத நீதிக்கட்சியின் பக்திமான்கள்

தான், இந்து அறநிலையத் துறை சட்ட மசோதாவை, சென்னை மாகாண சட்டமன்றத்தில் கொண்டு வந்தனர்.

(தொடரும்)

# 4. ஒள்ளெரி

— அருள் மெர்வின்



ஒரு குறுந்தொகைப் பாடலுக்குள் வரிக்குவரி இறங்குவோம். நீங்களும் நானும் பேசும் தமிழ் என்ற மொழியின் பேராற்றலும், அதைக் கையாண்ட பண்டைய புலவர்களின் பேராற்றலும் ஒருசேரப் புரியும்.

*கண்தர வந்த காம ஒள்ளெரி*

இந்த வரியை ஒன்றிரண்டு முறை வாசித்துப் புரிந்து கொள்ள முயற்சியுங்கள். கண்ணைத் தர வந்த காம ஒள்ளெரி? ‘கண்தர வந்த...’ என்றால் கண்ணைத் தர வந்த என்பது ஒருவகைப் புரிதல். ‘கண்தர வந்த...’ என்பதை ‘கண்தர வந்த...’ என்றே எளிதாக வாசித்துப் பாருங்கள். அவன் தர, நான் வாங்க என்பது போல ரொமான்டிக்காக ‘தர’வை உபயோகித்துப் பாருங்கள். ‘கண் தர’ என்றால் கண்ணால் தரப்படுவது. ‘கண்தர வந்த...’ என்றால் கண் தருவதால் வந்த! ‘காம’ என்பதை விளக்க வேண்டியதில்லை. பிக் பாஸ் பார்ப்பவர்களுக்குத் தெரிந்த சொல்தான்.

‘ஒள்ளெரி’ என்றால் என்ன? ஓட்டேரி நரி என்றெல்லாம் யோசிக்காமல் இதையும் எளிமையாக அணுகுவோம். ஒள் எரி. எரி என்றல் எரிவது. ஒள் என்றால்?

ஒளி என்றால் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நொடிக்கு மூன்று லட்சம் கிமீ வேகத்தில் நகர்வது. ஒளி நகராமல் ஒரே இடத்தில் இருந்தால்? ‘ஒள்’. ஒள் நீண்டால் ஒளி.

ஃபோட்டான் போல. சங்க இலக்கியங்களில் ஒள், ஒளி என்ற சொற்களைத் தனித்தனி சூழல்களில் அவற்றின் உணர்வு சார்ந்து உபயோகித்திருக்கிறார்கள். பெரும்பாலும், ஒளி வீசும் இடங்களில் 'ஒளி' என்றும் (உதாரணமாக, வானிலிருந்து, வாளிலிருந்து), ஒளி தனக்குள் இருக்கும் இடங்களில் 'ஒள்' என்றும் (உதாரணமாக, தீப்பந்தத்தில், அணிகலன்களில், நெற்றியில்) இந்த சொற்களைக் கையாண்டிருக்கிறார்கள். 'ஒளியார்முன் ஒள்ளிய ராதல்' என்று ஒளி வீசுபவர்கள் முன் ஒளியை உள்வாங்குபவர்களாக இருக்க வேண்டும் என்று அவையடக்கம் பற்றி வள்ளுவர் இந்த சொற்களை உபயோகித்திருப்பார்.

சூரியன் எரிவதால் கிடைப்பது ஒளி. வெள்ளரிக்காயை வெட்டினால் பளிச்சென்று உள்ளே தெரிவது 'ஒள்ளெரி'. (குறுந்தொகையைப் பதிப்பித்தவர்களுக்குக் கிடைத்த இன்னொரு சுவடியில் 'ஒள்ளெரி' என்பது 'வெள்ளெரி' என்று எழுதப்பட்டிருந்திருக்கிறது. இதற்கும் வெள்ளரிக்காய்க்கும் சம்பந்தம் இல்லை என்றாலும்.)

மேலேயுள்ள குறுந்தொகை வரியில் வரும் ‘ஔ்ளெரி’ ஒரு காதலியின் உள்ளத்துக்குள் எரியும் (காம) நெருப்பு என்று இப்போதைக்கு எடுத்துக் கொண்டு நகர்வோம்.

*என்பு உற நலியினும்*

என்பு என்றால் எலும்பு. ‘என்பு உற’ என்றால் என்ன? உறவு என்று நாம் அழைப்பவர்கள் நம்முடன் ஆழமாக இணைந்திருப்பவர்கள். என்புற என்றால் எலும்பு வரை ஆழமாகச் செல்வது. எது? கண் தர வந்த காம ஒள்ளெரி!

*கண் தர வந்த காம ஒள்ளெரி என்புற*
*நலியினும்*

கண் தர வந்த காம ஒள்ளெரி என் எலும்பு வரை ஆழமாகச் சென்று நலிய வைத்திருக்கிறது.

*அவரொடு பேணிச் சென்று நாம் முயங்கற்கு*
*அரும் காட்சியமே*

நான் சென்று அவனைக் கட்டிப்பிடிக்கலாம் என்பதெல்லாம் நடக்காத காரியம்.

*வந்து அஞர் களைதலை அவர் ஆற்றலரே*

அவனும் வந்து என் அஞர் (துன்பம்) களையமாட்டான்.

*உய்த்தனர் விடாஅர் பிரித்து இடை களையார்*

வேறு யாரும் உள்ளே புகுந்து களைந்துவிடவும் மாட்டார்கள். (அதாவது, இரண்டு பேர் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் ஊர்க்காரர்கள் உள்ளே ஜாலியாகப் புகுந்து பிரித்துவிட்டுச் சண்டையைக் களைவார்கள். இங்கே இவள் தன் உள்ளெரியுடன் போராடிக் கொண்டிருக்கிறாள். யாரும் அவள் மனதுக்கு உள்ளே புகுந்து பிரித்து இடை களைய முடியாது.)

*களைவோர் இலை யான் உற்ற நோயே*

களைவோர் யாரும் இல்லை எனக்கு வந்திருக்கும் இந்த நோய்க்கு.

தன் ‘உள்ளெரி’யுடன் தானேதான் போராடிக் கொண்டிருக்க வேண்டும் என்பதாக ஒரு காதலி புலம்பும் பாடல். சாதாரண பாடல்தான். இதை

அசாதாரணமான பாடலாக்குவது இதில் வரும் உவமை.

இவளது இந்த நிலைக்கு எதை உவமையாகச் சொல்லலாம் என்று இதை எழுதிய புலவர் யோசித்திருக்கிறார். இதுவரை எந்த சங்கப் புலவரும் உபயோகிக்காத ஒரு உவமையை உபயோகித்து கப்படிக்க வேண்டும் என்று தேடியிருக்கிறார் (அந்தகாலத்தில் கப்புக்குப் பதிலாக சங்கப்பலகை கொடுப்பார்களாம்). செடி, கொடி, மரம், பூ, நடப்பது, ஓடுவது, ஊர்வது, தாவுவது, பறப்பது, இவற்றைச் சாப்பிடுவது என்று எல்லா உயிர்வகைகளையும் உவமைகளாகச் சொல்லிவிட்டார்கள். இதில் எது விடுபட்டிருக்கிறது என்று தேடியிருக்கிறார். ‘குப்பை’ என்ற சொல்லுக்கு சங்ககாலத்தில் குவியல் என்று ஒரிஜினல் அர்த்தம் உண்டு. சங்க இலக்கியக் குப்பையைக் கிளறித் தேடியிருக்கிறார். விடுபட்ட உவமை ஏதாவது இருக்கிறதா என்று வெறிகொண்டு தேடியிருக்கிறார். இதைப் பார்த்துக் கடுப்பான ஒருவர், “ஏன் இப்படி கோழி மாதிரி குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கிறாய்?” என்று கேட்டிருக்கிறார். இதைக் கேட்டதும் புலவருக்கு ஸ்பார்க் அடித்துவிட்டது. உவமை சிக்கிவிட்டது.

இரண்டு கோழிகள் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் யாராவது பிரித்து வைப்பார்கள். ஆனால் கோழி தனியாக குப்பையைக் கிளறிக்கொண்டிருந்தால் யாரும் பக்கத்தில் செல்லமாட்டார்கள். 'குப்பைக் கோழி' என்ற புதிய சொல்லையும், புதிய உவமையையும் பிடித்து மேலே உள்ள பாடலில் கச்சிதமாகப் பொருத்திவிட்டார். கோழி குப்பையைக் கிளறிப் போரிடுவது போல (குப்பைக் கோழித் தனிப்போர் போல) அவள் தன் மனக்குப்பையைக் கிளறி ஒள்ளெரியுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறாள். கோழி எக்கேடும் கெட்டுப்போகட்டும் என்று யாரும் உள்ளே புகுந்து களைந்து விடாமல் இருக்கிறார்கள்.

*குப்பைக் கோழித் தனிப்போர் போல*
*விளிவு ஆங்கு விளியின் அல்லது*
*களைவோர் இலை யான் உற்ற நோயே*

மொத்த சங்க இலக்கியத்திலேயே 'குப்பைக் கோழி' உவமையாக வருவது இந்த ஒரு பாடலில்தான். குறுந்தொகை 305. இவருக்கு சங்கப்பலகை கொடுப்பதற்குப் பதிலாக 'குப்பைக்

கோழியார்’ என்ற பட்டத்தைக் கொடுத்துவிட்டார்கள். குப்பைக் கோழி என்றால் ஏதோ ஒருவகைப் பறவை என்றெல்லாம் ஆராய அவசியமில்லை. ஆங்கிலத்தில் bin chicken என்பார்கள். குப்பைத் தொட்டிகளைக் கிளறி உணவு தேடும் பறவைகள். பெரும்பாலும் மைக்ரேஷன் பறவைகள் இப்படி குப்பைத் தொட்டிகளைக் கிளறுவதைப் பார்க்கலாம்.

மொத்த பாடல் வரிகளை இன்னொருமுறை வாசித்து ரசித்து உள்வாங்குங்கள். கூடவே, ‘கசடதபற ஙஞணநமன யரலவழள’ என்ற பதினெட்டு மெய்யெழுத்துகளில் எந்தெந்த எழுத்துகளெல்லாம் இந்த எட்டுவரிப் பாடலில் வருகின்றன, எதெல்லாம் விடுபட்டிருக்கின்றன என்று கண்டுபிடியுங்கள். குப்பைக் கோழியாரின் தமிழ்த் திறமை புலப்படும்.

*கண் தர வந்த காம ஒள்ளெரி*
*என்பு உற நலியினும் அவரொடு பேணிச்*
*சென்று நாம் முயங்கற்கு அரும் காட்சியமே*
*வந்து அஞர் களைதலை அவர் ஆற்றலரே*
*உய்த்தனர் விடாஅர் பிரித்து இடை களையார்*
*குப்பைக் கோழித் தனிப்போர் போல*
*விளிவு ஆங்கு விளியின் அல்லது*

*களைவோர் இலை யான் உற்ற நோயே*

மெய்யெழுத்துகள் ஏதும் விடுபடாத குறும்பாடல்கள் எழுதுவது கடினம். விதவிதமான சொற்களைத் தேர்ந்தெடுத்து உபயோகிக்க வேண்டும். 'கோழி'யை உபயோகித்திருக்காவிட்டால் 'ழ' விடுபட்டிருக்கும். இதேபோல மெய்யெழுத்துகள் ஏதும் விடுபடாத இன்னொரு குறுந்தொகைப்பாடல் தருமிக்கு பொற்கிழி வாங்க இறையனார் எழுதிக்கொடுத்த பாடல்.

'ஒள்ளெரி'யில் இந்த பதிவை முடித்து தலைப்பை நியாயப்படுத்திவிடுகிறேன். கோவலன் கொலையுண்டதும் கண்ணகி நியாயம் கேட்க உடனே சிலம்பை எடுத்துக் கொண்டு அரண்மனை நோக்கிச் செல்லமாட்டாள். அதற்கு முன் கோவலன் கள்வனல்ல என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள எல்லா சம்பவத்தையும் நேரில் பார்த்துக் கொண்டிருந்த ஒருவரைக் கேட்பாள். வானத்திலிருந்த சூரியனைப் பார்த்து, "காய் கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?" என்று கேட்பாள். சூரியன் வாய் பேசாது. ஆனால் கண்ணகிக்கு ஒரு குரல் கேட்கும். அந்த குரல் அவன் கள்வன் அல்ல

என்று சொல்லும். ஆனால், அந்த குரல் அதோடு நிற்காது. இன்னொன்றும் சொல்லும். அதை இளங்கோவடிகள் இவ்வாறாகச் சொல்வார்:

"*ஒள்ளெரி உண்ணும் இவ்வூர்*", என்றது ஒரு குரல்.

ஒள்ளெரி இந்த ஊரை உண்ணும் என்றது அந்த குரல். அதன் பிறகு அரண்மனையை நோக்கிச் செல்வாள். அவள் நெஞ்சில் எரிந்த தீ மதுரையையே எரிக்கும்.

– அருள் மெர்வின் (07–01–26)

# 5. இந்து அறநிலையத்துறை தேவையா? – II

— முனைவர் சிவ இளங்கோ

விகிதாச்சாரப்படி பார்ப்பனர் அல்லாதவர் பெரும்பான்மையாக இருந்த சென்னை மாகாணத் தேர்தலில், நீதிக்கட்சி பெரும்பான்மை அடைந்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை. நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவைக் காலத்தில் (1920–23) கோயில்களின் நிர்வாகத்தைச் சீரமைப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு குழுவின் ஆலோசனைப்படி, 1922 ஆம் ஆண்டு, டிசம்பரில் ஒரு மசோதா சட்டமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது. இதனை மெட்ராஸ் மெயில் நாளேடு பாராட்டி எழுதியிருந்த அதே நேரம், இந்து பத்திரிகையும், பிற பார்ப்பன ஊடகங்களும் மிகக் கடுமையாக அம்மசோதாவை எதிர்த்து எழுதினர்.

கோவில் வருமானத்தில் கிடைக்கும் உபரி நிதியில் நகராட்சி மூலம் மருத்துவமனைகளை அமைப்பது, சாலைகள் அமைப்பதையும் விட, வேதம் படிப்பதையே அந்த

நன்கொடையாளர்கள் விரும்புவார்கள் என்று பார்ப்பனப் பத்திரிகைகள் எழுதின. அப்போது சென்னை மாகாணப் பிரதம அமைச்சராக இருந்த பனகல் அரசர், இம்மசோதாவுக்கு எழுந்த எதிர்ப்புகளையெல்லாம் ஒருவாறு சமாளித்தார். ஒரு சில திருத்தங்களுக்குப் பின், 1923 ஆம் ஆண்டு ஏப்ரலில், மசோதா நிறைவேற்றப்பட்டது. ஆனாலும், எதிர்ப்பாளர்கள் டில்லி வரை சென்று வைசிராயிடம் விண்ணப்பித்தனர். இதனால் மசோதா சட்டமாவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில் 1923 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றி பெற்று இரண்டாவது அமைச்சரவையை அமைத்தது. இதனைத் தொடர்ந்து 1924, ஏப்ரல் மாதத்தில், இந்து அறநிலையத்துறை மசோதா மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு உடனடியாக நிறைவேற்றப் பட்டது.

இறுதியில் வைசிராயின் ஒப்புதலுடன் 1925 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்து அறநிலையத்துறை மசோதா சட்டமாக்கப்பட்டது. இந்த மசோதா சட்டமாக்கப்பட்டதுடன், கோயில் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற

தன்னுடைய கொள்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் விலக்கிக் கொண்டது.

இந்து அறநிலையத்துறை சட்டம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1927 ஆம் ஆண்டு "இந்து சமய அறநிலைய வாரியம்" ஒன்று அமைக்கப்பட்டது. "மெட்ராஸ் இந்து சமய அறநிலையங்கள் சட்டம், 1927" என்ற சட்டத்தின் படி இவ்வாரியம் அமைக்கப்பட்டது. இதற்கும் மிகப்பெரிய எதிர்ப்பு நிலவியது. காங்கிரஸ் கட்சியின் சத்தியமூர்த்தி ஐயர் போன்ற சனாதனிகள், சட்டமன்றத்தில் இந்து அறநிலையத்துறை மசோதா கொண்டுவரப்பட்ட போதும், தேவதாசி ஒழிப்பு மசோத கொண்டுவரப்பட்ட போதும் அவற்றை எதிர்த்துப் பேயாட்டம் ஆடித் தீர்த்தனர்.

"இந்து அறநிலையத்துறை சட்டம், 1927" இல் சில திருத்தங்கள் செய்யப்பட்டு "மெட்ராஸ் இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டம், 1951" இயற்றப்பட்டது. இதன் மூலம் தலைமை அதிகாரியாக ஆணையர் ஒருவர் நியமனம் செய்யப்பட வழிவகை செய்யப்பட்டது. இறுதியாக, 1959 ஆம் ஆண்டில், காமராசர் ஆட்சிக் காலத்தில், முந்தைய சட்டங்களின் குறைபாடுகள்

சில களையப்பட்டுத் தற்போது உள்ள சட்டமான "தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டம், 1959" இயற்றப்பட்டது. இதன்படி இந்து சமயக் கோயில்களை நிர்வாகிப்பதற்கான தனியான அரசுத்துறை ஒன்று உருவானது.




அரசாங்கத்தின் துறைகள் என்ற வகையில் வருவாய்த் துறைக்கு அடுத்தபடியாக அதிக அளவு அசையாச் சொத்துக்களை கொண்டுள்ள அரசு துறை என்றால் அது இந்து சமய அறநிலையத்துறை ஆகும். இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் தற்போது 38,635 இந்து சமயக் கோவில்கள், மடங்கள், அறக்கட்டளைகள், சமண சமயக் கோவில்கள் ஆகியவை உள்ளன. இந்த சமய நிறுவனங்கள் ஆண்டு வருவாய் அடிப்படையில் பட்டியலைச் சாராதவை என்றும், பட்டியலைச் சார்ந்தவை என்றும் சட்டத்தால் வகைப்படுத்தப்

படுகின்றன. மாதம் 10 ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ள கோயில்கள் பட்டியல் சார்ந்தவை என்றும், அதற்குக் கீழ் வருமானம் உள்ளவை பட்டியல் சாராதவை என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பட்டியல் சாராத கோவில்கள் உதவி ஆணையர் நிலை அலுவலர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. பட்டியலைச் சார்ந்த கோயில்கள் இணை ஆணையர் நிலை அலுவலர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்து அறநிலையத் துறையின் முக்கியமாக பணிகளாகக் குறிப்பிடப்படுபவை: கூட்டம் அதிகமாக வரும் கோயில்களில் பக்தர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு தரிசனத்திற்குத் தனியே அழைத்துச் செல்வதைத் தடுப்பது; முறையாக நுழைவுச்சீட்டு மூலம் சிறப்பு தரிசனம் போன்ற ஏற்பாடுகள் செய்வது; கோயில் உண்டியல் முதல் சிறப்பு தரிசன நுழைவுச் சீட்டுகள், கோயிலைச் சுற்றி உள்ள கடைகளில் வசூலிக்கப்படும் வாடகைப்பணம் ஆகியவை கோயில் பெயரில் வங்கிக் கணக்கில் முறையாகச் செலுத்தப்படுவதைக் கண்காணிப்பது; கோயிலுக்கான செலவுகள் உண்மையில் சரியாக செய்யப்படுகின்றனவா அல்லது வெறுமனே கணக்குப் புத்தகங்களில்

மட்டுமே எழுதப்படுகின்றனவா என்று கண்காணித்தல்; கோயிலுக்கு நிலங்கள், அசையாச் சொத்துகள் இருந்தால் அதற்கான குத்தகை, வாடகைப் பணங்கள் சரியாக வசூல் செய்யப்பட்டு வங்கியில் செலுத்தப்படுகிறதா என்று கண்காணிப்பது ஆகியவை.




இந்தப் பணிகளை அறநிலையத் துறையின் அதிகாரிகள் மிகுந்த சிரமத்தோடு மேற்கொண்டு வருகின்றனர். இத்தனை ஆயிரம் கோவில்களை நிர்வகிக்க ஆணையர் முதல் கடைநிலை ஊழியர் வரை மிகப்பெரிய கட்டமைப்பை தமிழ்நாடு அரசாங்கம் உருவாக்கி வைத்திருக்கிறது.

இவர்களுக்குத் தமிழ்நாடு அரசு கஜானாவின் மூலம் பெறப்படும் மக்கள் வரிப்பணத்தில் இருந்துதான் ஊதியம் வழங்கப்படுகிறது. அதேநேரம், கோயில்களின் வருவாயிலிருந்து தான் பூசாரிகளுக்குச் சம்பளம் வழங்கப்படுகிறது.

இந்து அறநிலையத் துறையின் சட்ட நெறிமுறைகளைப் பின்பற்றி இந்து சமய அறநிலையத்துறை, தமிழ்நாட்டின் ஆலய நிர்வாகங்களைச் சிறப்பாக மேம்படுத்தி உள்ளது. இதனால் ஆலயங்களின் வருவாய் பல மடங்கு பெருகி வருகிறது. இத்துறையில் பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் குறைவாக இருக்கின்ற சூழ்நிலையிலும், ஆலயங்களின் நுழைவுச்சீட்டு தேவைக்கேற்ப அச்சிடப்பட்டு ஆலய அலுவலகத்தில் முறையான கணக்கு வழக்குகளுடன் இத்துறையால் பாதுகாக்கப்படுகிறது.

ஆலயத்தில் உள்ள உண்டியல்கள் இத்துறை அலுவலர்களால் முத்திரையிடப்பட்டு, முறையாகத் திறக்கப்பட்டு, அந்தத் தொகை ஆலயக் கணக்கில் வங்கியில் சேர்க்கப்படுகிறது. ஆலயத்திற்குச் சொந்தமான கடைகள், வீடுகள், நிலங்கள், காலியிடங்கள் ஆகியவற்றை

சட்டப்படி வாடகைக்கு விட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலயத்திற்கு வருகின்ற நன்கொடைகள், காணிக்கைகளுக்கு இரசீது போடப்பட்டு முறையாக வரவு வைக்கப்படுகின்றன. கணக்குகள் கால அடிப்படையில் தணிக்கை செய்யப்படுகின்றன. தணிக்கையில் குறைபாடுகள் இருந்தால் அதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பல ஆலயங்களில் திருப்பணிகள் சரிவர நடைபெறுகிறதா என்று கண்காணிக்கப் படுகின்றன. இத்திருப்பணிகளுக்கு அரசு நிதி உதவியும் செய்து வருகின்றது.

இந்து அறநிலையத்துறையின் வழி மாநிலத்தின் கல்வி மேம்பாடு, பண்பாட்டு மேன்மை, ஓய்வு பெற்றோர்களுக்கு ஆதரவு, பெற்றோரற்றச் சிறுவர்கள் பராமரிப்பு, மருத்துவமனைகள் பராமரிப்பு ஆகிய பொதுநலப் பணிகளும் செய்யப்பட்டு வருகின்றன. சாதி சார்பற்ற சிறப்பு வழிபாடுகளும், சமபந்தி விருந்துகளும் பெரும்பாலான ஆலயங்களில் நடத்தப்படுகின்றன. ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஏழை

இந்துக்களின் திருமணங்களைப் பல்லாயிரக்கணக்கில் நடத்தி வருகின்றது.

இக்கோயில்கள் மூலம் வரும் வருமானத்திலிருந்து இதுவரை 56 கல்லூரிகளும், தொழில்நுட்பக் கல்லூரிகளும் (பாலிடெக்னிக்) நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, இடைநிலைப் பள்ளி, தொடக்கப்பள்ளி என்று 360 பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுடன் நாதஸ்வர பயிற்சிப் பள்ளி, வேத ஆகமப் பாடசாலை, தேவாரப் பயிற்சிப் பள்ளி, காது கேளாதோர் பள்ளி, கருணை இல்லம் ஆகியவற்றுடன் 45 மருத்துவமனைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பல ஆலயங்களில் அன்னதானமும், ஒரு காலப் பூசைகளும், இலவசத் திருமணங்களும் நடத்தப்படுகின்றன. இந்தத் தகவல்கள் எல்லாம் இந்து அறநிலையத் துறையின் ஓய்வு பெற்ற அதிகாரியின் வாக்கு மூலங்கள்.

இதுவரை கூறியபடி, இவ்வளவு சீரான பணிகள் நடந்து வருவதற்குக் காரணம் இந்து அறநிலையத் துறையின் செயல்பாடுகள் தான். இப்படிப்பட்ட செயல்பாடுகள் இல்லாமல்,

இத்தனை வருவாயும் காலங்காலமாகப் பார்ப்பனர்களால் கொள்ளை அடிக்கப்பட்டே வந்திருக்கின்றன. இவையெல்லாம் தெரிந்தும் கோவில் அறக்கட்டளை நிர்வாகிகளும், அறங் காவலர்களும் இதற்குப் பெரிய அளவில் எதிர்ப்புத் தெரிவிக்காமல் முனகலுடன் நிறுத்திக் கொள்கின்றனர்.


காவல் நிலையங்களுக்குச் சென்றாலும் பார்ப்பனர்களுக்கு எதிராக அவர்களும் வழக்குத் தொடுப்பதில்லை. நீதிமன்றங்களில் பார்ப்பன மேலாண்மையே நிலவுவதால் இந்த வழக்குகளில் தவறு செய்தவர்களுக்குத் தண்டனை கிடைப்பதில்லை. மாறாக அவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டு அனுப்பப் படுகின்றனர். இப்படி ஆங்கிலேயர் காலத்தில் இருந்து நடத்திய வழக்குகளில் ஏராளமானவை நீதிமன்றச் சான்றுகளாகவே உள்ளன.

தொன்றுதொட்டு மன்னர்களாலும், பக்தி மார்க்கத்தில் திளைத்திருக்கும் மக்களாலும் கோயில்களுக்கு ஏராளமான சொத்துகள் குவிந்து வருகின்றன. வாழும் பிறவியில் இல்லை என்றாலும், அடுத்த பிறவியிலாவது சொகுசான வாழ்க்கை வாழ, ஒரு பயன்தரத்தக்க முதலீடு

என்ற நம்பிக்கையில் தான் இப்படிக் கோயில்களுக்கும், கடவுள் பெயருக்கும் மன்னர்களும், மக்களும் சொத்துக்களைக் குவித்து வைத்துள்ளனர்.

இப்படிக் குவிந்த சொத்துகளை, எங்கிருந்தோ வந்த பார்ப்பனர்கள் தங்களின் ஏகபோக உரிமைகளாக வரித்துக் கொண்டு, கணக்கு வழக்கற்ற நிலையில் அதை அனுபவித்துக் கொண்டு, அந்த நிலையைத் தங்களுக்குத் தந்த மக்களையே பிறவியில் பேதம் கூறி, தரந்தாழ்த்தி நடத்தி வருகிறார்கள். சாதியைச் சொல்லிக் கோவிலுக்குள் நுழைய அனுமதி மறுத்து வருகிறார்கள்.

தென்னிந்தியாவிலேயே அதிக வருமானம் உள்ள கோவிலான திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு உள்ள சொத்துகள் சொல்லியும் மாளாது; எண்ணியும் மாளாது. விஜயநகரப் பேரரசின் மன்னர் கிருஷ்ணதேவராயர் கி.பி. 1513 முதல் 1521 வரை திருப்பதி கோயிலுக்கு ஏழு முறை சென்று, ஏராளமான நகைகளை வழங்கி இருக்கிறார்.





கிருஷ்ணதேவராயர் முடி சூட்டிக் கொண்ட 500 ஆவது ஆண்டு நிறைவையொட்டி (2009) ஆந்திர அரசு கொண்டாடிய விழாவுக்குக் கிருஷ்ணதேவராயர் வழங்கிய நகைகளைப் பார்வையிடக் கேட்டால் "அவை எதுவுமே இல்லை; உருக்கப்பட்டு விட்டன" என்று பதில் வருகிறது. யாருடைய அனுமதியில் இவை உருக்கப்பட்டன என்ற கேள்விக்குப் பதில் இல்லை. கோயில் நகைகள் திருடப்பட்டது குறித்தும், பிற மோசடிகள், ஊழல்கள் குறித்தும் ஆந்திர முதலமைச்சரே புலனாய்வு விசாரணை கோரியும் எதுவும் நடைபெறவில்லை.

(தொடரும்)

# 6. மெக்காலே – பழமைவாதக் கல்வியின் பகைவன்: நூல் அறிமுகம்

— ச. வெங்கடேசன்




இந்தியக் கல்வி வரலாற்றில் மிக அதிகமாக விமர்சிக்கப்படும், அதே சமயம் விவாதிக்கப்படும்

ஒரு பெயர் 'தாமஸ் பாபிங்டன் மெக்காலே' (Thomas Babington Macaulay). பொதுவாக, "இந்தியர்களின் பாரம்பரியக் கல்வியை அழித்தவர்", "குமாஸ்தாக்களை உருவாக்கும் கல்வியைத் தந்தவர்", "ஆங்கிலத்தைத் திணித்தவர்" என்றெல்லாம் மெக்காலே மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவது வழக்கம். ஆனால், அந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பின்னால் இருக்கும் அரசியல் என்ன?

மெக்காலேவின் வருகைக்கு முன்பு இங்கு இருந்த கல்வி முறை உண்மையில் அனைவருக்கும் பொதுவானதாக இருந்ததா? போன்ற கேள்விகளை அறிவியல் பூர்வமாகவும், வரலாற்றுச் சான்றுகளுடனும் அணுகுகிறது முனைவர் இரா. சுப்பிரமணி அவர்கள் எழுதியுள்ள இந்த நூல்.

இந்த நூலின் முக்கியக் கூறுகள் மற்றும் வாதங்களை பின்வருமாறு தொகுக்கலாம்:

### 1. மெக்காலே மீதான குற்றச்சாட்டுகளும் உண்மையும்

மெக்காலே என்றாலே நினைவுக்கு வருவது, "இந்தியர்களை நிறத்தால் இந்தியராகவும், சிந்தனையால் ஆங்கிலேயராகவும் மாற்றுவதே என் நோக்கம்" என்ற அவரது புகழ்பெற்ற மேற்கோள். ஆனால், இந்த நூல் அந்த மேற்கோளின் மறைக்கப்பட்ட இரண்டாம் பாதியை வெளிச்சத்திற்கு கொண்டுவருகிறது.

மெக்காலேவின் முழுமையான நோக்கம், இந்திய மொழிகளை அழிப்பது அல்ல; மாறாக, ஆங்கிலத்தின் வழியாக நவீன அறிவியலை இந்தியர்களுக்குக் கற்றுக்கொடுத்து, அந்த அறிவைக் கொண்டு இந்தியத் தாய்மொழிகளைச் செழுமைப்படுத்துவதே ஆகும். மேலைநாட்டு அறிவியல் கலைச்சொற்களை இந்திய மொழிகளுக்குக் கொண்டுவருவதே அவரது நீண்டகாலத் திட்டமாக இருந்தது என்பதை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

## 2. பழைய கல்வி முறையின் மீதான விமர்சனம்

மெக்காலே ஏன் இந்தியப் பாரம்பரியக் கல்வி முறையை எதிர்த்தார் என்பதற்கான வலுவான காரணங்களை நூல் அலசுகிறது. அன்றைய (1835

காலகட்டத்தில்) இந்தியப் பாடத்திட்டங்களில் இருந்தவை:

- மருத்துவம் என்ற பெயரில் மந்திரவாதம்.
- வானியல் என்ற பெயரில் ஜோதிடம் மற்றும் மூடநம்பிக்கைகள்.
- வரலாறு என்ற பெயரில், "30 அடி உயரமுள்ள அரசர்கள் 30,000 ஆண்டுகள் ஆட்சி செய்தார்கள்" என்பது போன்ற நம்பகத்தன்மையற்ற புராணக் கதைகள்.
- பூகோளம் என்ற பெயரில் "பாற்கடலும், நெய்க்கடலும்" இருப்பதாகப் போதிக்கப்பட்ட பாடம்.

இத்தகைய நவீன அறிவியலுக்குப் பொருந்தாத, மூடநம்பிக்கைகளை வளர்க்கும் கல்வியை விடுத்து, ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் விளைவாக உருவான நவீன அறிவியல், மருத்துவம் மற்றும் தொழில்நுட்பக் கல்வியை இந்தியர்களுக்கு வழங்க வேண்டும் என்பதே மெக்காலேவின் பிடிவாதமாக இருந்தது.

## 3. சமூக நீதிப் பார்வை

இந்த நூலின் மிக முக்கியமான அம்சம், மெக்காலேவின் கல்வி முறையை ஒரு சமூக நீதிப் பார்வையில் அணுகுவதாகும்.

ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு இந்தியாவில் நிலவிய 'திண்ணைப் பள்ளிக்கூடம்' மற்றும் 'குருகுலக் கல்வி' ஆகியவை அனைவருக்கும் பொதுவானவை அல்ல. அவை குறிப்பிட்ட சாதியினருக்கானதாக (பார்ப்பனர்கள்) மட்டுமே இருந்தன.

பெண்களுக்கும், ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கல்வி உரிமை மறுக்கப்பட்டிருந்தது.

மெக்காலே கொண்டுவந்த பொதுக் கல்வி முறைதான் (Public Education System), ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கல்வி மறுக்கப்பட்டிருந்த அடித்தட்டு மக்களுக்குக் கல்வி வாசலைத் திறந்துவிட்டது.

மகாத்மா ஜோதிராவ் பூலே, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் போன்ற சமூக

சீர்திருத்தவாதிகள் மெக்காலேவின் கல்வி முறையை ஆதரித்ததன் பின்னணி இதுவே என்பதையும் நூல் நினைவூட்டுகிறது.

## 4. தொழிற்புரட்சியும் மொழியின் தேவையும்

ஆங்கிலேயர்கள் வணிகத்திற்காக வந்தாலும், அவர்கள் கொண்டுவந்த ரயில்வே, அச்சு இயந்திரங்கள் மற்றும் தொழிற்சாலைகளை இயக்கத் தேவையான தொழில்நுட்ப அறிவு இந்தியர்களிடம் இருக்கவில்லை. இந்திய மொழிகளில் அதற்கான கலைச்சொற்களும் இல்லை. இந்த இடைவெளியை நிரப்பவே ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்டது. இது இந்தியர்களை வெறும் குமாஸ்தாக்களாக மாற்ற அல்ல; மாறாக, உலகளாவிய நவீன அறிவை நோக்கி அவர்களைத் திசைதிருப்பவே உதவியது என்று நூல் வாதிடுகிறது.

## 5. நூலின் நோக்கம்

இந்நூல் மெக்காலேவை ஒரு ஹீரோவாகக் கொண்டாடுவதற்காக எழுதப்படவில்லை என்று நூலாசிரியர் தெளிவுபடுத்துகிறார். மாறாக:

- வரலாற்றை விருப்பு வெறுப்பின்றி வாசிக்க வேண்டும்.

- வெறும் உணர்ச்சிப்பூர்வமான தேசப்பற்று முழக்கங்கள் நம்மை மீண்டும் இருண்ட காலத்திற்கே அழைத்துச் செல்லும்.

- இன்று நாம் அனுபவிக்கும் அறிவியல் வளர்ச்சி, சாதி பேதமற்ற கல்வி வாய்ப்பு ஆகியவை மெக்காலே விதைத்த விதையிலிருந்து முளைத்தவையே.

## முடிவுரை

"எப்போது நாம் தலைநிமிர்வோம்?" என்ற கேள்வியுடன், நம் கடந்த கால தவறுகளைத் திருத்திக்கொண்டு, நவீன உலகின் அறிவியலைக் கைக்கொண்டு முன்னேற வேண்டியதன் அவசியத்தை நூல் வலியுறுத்துகிறது. மெக்காலேவின் மீதான வழக்கமான வசவுமொழிகளுக்கு அப்பால் சென்று, இந்தியக் கல்வி வரலாற்றில் அவரது பங்களிப்பை ஒரு நேர்மையான, சான்றுகளின் அடிப்படையிலான ஆய்வாக இந்நூல் முன்வைக்கிறது.

கல்வி வரலாறு, சமூக நீதி மற்றும் பகுத்தறிவுச் சிந்தனையில் ஆர்வமுள்ள அனைவரும் வாசிக்க வேண்டிய ஒரு முக்கியமான ஆவணம் இந்நூல்.

**நூலாசிரியர்:** முனைவர் இரா. சுப்பிரமணி

வெளியீடு: சாளரம் பதிப்பகம்

புத்தகம் வாங்கிக்கொள்ள:
https://www.panuval.com/macaulay-10026268

# 7. மணலூர் மணியம்மாள்: ஒரு வியப்பூட்டும் ஆளுமை

— தோழர் நக்கீரன்

மணலூர் மணியம்மாள் எனக்கு எப்போதுமே ஒரு வியப்பூட்டும் ஆளுமை.

இத்தகைய தன்னலமற்ற ஓர் ஆளுமையை இன்னமும் அறியாமல் இருக்கும் இளையத் தலைமுறைக்கு அறிமுகப்படுத்தவே இப்பதிவு.

பத்து வயதில் குழந்தை திருமணம் செய்யப்பட்டு, 27 வயதில் விதவையாகும் ஒரு பெண் அன்றைய அக்கிரகார வழக்கப்படி தலை மொட்டையடிக்கப்பட்டு வீட்டுக்குள் முடக்கப்படுவார். அப்படி விதவையாகி தந்தை வீட்டுக்குத் திரும்பியவர்தான் மணியம்மாள்.

ஆனால், சனாதனத்தை எதிர்த்து மொட்டைத் தலையிலிருந்து கிராப்புக்கு மாறி, புடவையைத் துறந்து, வேட்டி – சட்டை– துண்டு என்று தன் உடையை ஆணின் உடைப்போல மாற்றிக் கொண்டு ஒற்றைக்காளை பூட்டிய வண்டியைத்

தானே ஓட்டிச்சென்ற ஒரு அக்கிரகாரத்துப் பெண்ணைக் கற்பனை செய்து பார்க்கிறேன். இவ்வளவுக்கும் அது பிரிட்டிஷார் காலம்.

முதலில் காந்தியவாதியாக இருந்த இவர், பின்னர் பொதுவுடமை தத்துவத்தின் பால் ஈர்க்கப்படுகிறார். தன் பண்ணையிலேயே பண்ணையடிமையை ஒழித்து கூலியை வாரி வழங்கினார் என்கிறார்கள். விளைவு, சுற்றத்தாரால் நிலம் பறிக்கப்பட்டு வீடு மட்டுமே எஞ்சியதாம். அசராமல் ஒரு சைக்கிள் வாங்கி ஓட்டப் பழகி வேட்டி – சட்டையிலேயே கட்சிப் பணியைத் தொடர்கிறார். 1940– 50களில் அப்பகுதியின் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மணியம்மா கட்சி அல்லது அம்மா கட்சி என்றே பெயர் இருந்திருக்கிறது.

பின்னர், கட்சி நடவடிக்கைக்காகக் கடலூர், வேலூர் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளார். உள்ளூர் எதிரிகளை சமாளிக்க சிலம்பமும் கற்றுக் கொள்கிறார். ஆனாலும், ஒரு பண்ணைக் கூலி நடவடிக்கைக்காக வெளியூர் சென்று திரும்பும் வழியில் மான் ஒன்று அவரது முதுகில் குத்தி இறந்து போனார் என்பதை நாம் நம்பித்தான் ஆக வேண்டும்.

இத்தகைய ஆளுமை எப்படி இறக்க முடியும்? இன்னும் கீழத் தஞ்சைப் பகுதியின் நாட்டுப்புறப் பாடல்களில் வாழ்ந்து வருகிறார். மாதிரிக்கு ஒன்று:

*கோட்ட இடிஞ்சி விழ*
*கொடி பிடிச்சி அம்மா வந்தா*
*சாட்டை அடிக்கும் முன்னே*
*சாகசங்க செய்து வந்தா*

*மதிலுகள் சரிஞ்சு விழ*
*மணியம்மா அங்கே வந்தா*
*பதிலுகள் கேட்டு வந்தா*
*பட்டமரம் தழைக்க வந்தா*

*ஏழைகுலம் குளிரும்*
*எங்கம்மா பேரு சொன்னா*
*மக்கள் குலம் விளங்கும்*
*மணியம்மா பேரு சொன்னா*

*நம்பி உழைத்தோருக்கு*
*நாயங்கள் கேட்டு வந்தா*
*கும்பி குளிர வந்தா*
*குரலுகளும் எழுப்பி வந்தா*

இன்று கவிஞர் நிலாதரன் வழிகாட்டலில் கவிஞர் சூ. சிவராமனுடன் மணியம்மாள் வாழ்ந்த வீட்டை பார்க்க கீழ வெண்மணி அருகேயுள்ள மணலூர் சென்றேன். சிதிலத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் வீட்டில் இருந்து மணியம்மாள் தன் சைக்கிளில் இயக்கப் பணிக்கு செல்லும் காட்சி மனதிலாடியது.



இவரது வரலாற்றை ராஜம் கிருஷ்ணன் அவர்கள் 'பாதையில் பதிந்த அடிகள்' என்ற பெயரில் நாவலாக எழுதியுள்ளார். மணலூர் மணியம்மாளின் கொள்கை பொதுவுடைமை, சனாதன மறுப்பில் பெரியாரியம், தலித் மக்களுக்கான சேவையில் தலித்தியம், இன்றைய பெண்ணியத்துக்கும் முன்னோடி என அனைத்து பரிமாணங்களும் அடங்கிய இந்த ஆளுமையின் இல்லம் நினைவுச்சின்னம் ஆக்கப்பட வேண்டும் என விரும்புகிறேன். அவரது உருவம்கூட கற்பனையில் மட்டுமே வரையப்படும் நிலையில், எஞ்சியுள்ளது அவரது இந்த இல்லம் மட்டுமே. அரசிடம் வலியுறுத்த முற்போக்காளர்கள் முன்முயற்சி எடுக்க வேண்டும்.

சூழலியல் எழுத்தாளர் தோழர் நக்கீரனின் முகநூல் பதிவிலிருந்து...
(10–01–26)

# 8. இந்து அறநிலையத்துறை தேவையா? – III

— முனைவர் சிவ இளங்கோ

அரசாங்கம் தலையிட எவ்வளவோ முயன்றும், "ஏழுமலையானுக்குச் சொந்தமான கோடிக்கணக்கான நகை மோசடி! தங்கமுலாம் பூசப்பட்ட செப்பு நகைகளை வைத்துவிட்டு ஒரிஜினல் நகைகள் களவாடல்" என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததுதான் மிச்சம் (மாலைமுரசு, 26.8.2009).

அதேபோல சிதம்பரம் கோயில் கொள்ளைகள் குறித்தும் ஏராளமான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இக்கோவிலின் ஊழல்கள், தீட்சிதர்களின் முறைகேடுகளைப் பட்டியலிட்டுச் சென்னை தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த செயலாளர்கள் மற்றும் நாக. வெங்கடேச தீட்சிதர், நடராஜ தீட்சிதர், சங்க சபேத தீட்சிதர் ஆகிய பார்ப்பனர்கள் கையொப்பமிட்டுத் தமிழ்நாடு முதலமைச்சருக்கும், இந்தியப் பிரதமருக்கும் புகார்களை அனுப்பினார்கள். இந்தப் புகார்கள்

குறித்துப் புவனகிரி சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேசி விசாரணைக் கமிஷன் கோரியிருக்கிறார். ஆனாலும் எதுவும் நடைமுறைக்கு வந்தபாடில்லை (ஜூனியர் விகடன் 20.7.1994).




"சிதம்பரம் கோவில் தீட்சிதர்கள் கடவுளுக்கே துரோகம் செய்கிறார்கள்" என்று நீதிபதி சதாசிவ அய்யர் ஒரு தீர்ப்பில் கூறியிருக்கிறார். 31. 12. 1925 அன்று அவர் அளித்த ஒரு தீர்ப்பில், "சிதம்பரம் கோயில் தீட்சிதர்கள் உண்மைக்குப் புறம்பாக மனு கொடுத்துள்ளனர். எவ்வித வரவு செலவுக் கணக்குகளையும் வைக்காமல், நம்பிக்கைத்

துரோகக் குற்றச்சாட்டிற்கு உள்ளாகிறார்கள்" என்று தன்னுடைய தீர்ப்பில் எழுதி இருக்கிறார்.

சிதம்பரம் கோயில் தங்களுடைய சொந்த சொத்து என்று தீட்சிதர்கள் வழக்குத் தொடுத்த போது, அந்த வழக்கினை விசாரித்த திருவாரூர் டி. முத்துசாமி ஐயர், "முற்காலம் தொட்டே இக்கோயில் ஒரு பொது வழிபாட்டுக்குரிய இடமாக இருந்து வருகிறது. இக்கோயில் தீட்சிதர்களின் சொந்த சொத்து என்பதற்குச் சிறு துளியும் கூட ஆதாரம் கிடையாது" என்று கூறிவிட்டார். 1888 ஆம் ஆண்டின் வழக்கின் தீர்ப்பு அது. இப்படிப்பட்ட கொள்ளைக் கூட்டம் இந்தக் கோயிலில் மட்டுமல்ல, எல்லாக் கோவில்களையுமே ஆக்கிரமித்துக் கொண்டது. அவர்களின் கைவரிசை உண்டியல் ஆழத்திற்கும், நிலத்தின் ஆழத்திற்கும், கோயில் ஆழத்திற்கும் நீண்டு செல்கின்றன.

இந்தியா முழுவதும் குறிப்பாகத் தமிழ்நாட்டுக் கோயில்களில் கடவுள் சிலைகளும், நகைகளும் அதிகமாகத் திருட்டுப் போகின்றன. இவற்றிற்குக் கோயிலில் அர்ச்சகர்களாகப் பணிபுரியும் பார்ப்பனர்களே காரணமாக இருக்கின்றனர். சிதம்பரம் நடராஜர் கோயில் கொள்ளை

(ஜுனியர் விகடன், 19.2.1995), மதுரை அழகர் மலைக் கள்ளழகர் கோயில் கொள்ளை (ஜுனியர் விகடன், 3.8.1994), நெல்லையப்பர் கோயில் கொள்ளை, மதுராந்தகம் ராமர் கோவில் கொள்ளை, திருக்குண வாயிற் கோயில் பெருந்திருட்டு என்று பட்டியல் பெரிய அளவில் நீள்கிறது.

திருவிழாக் காலங்களில், கோவில்களுக்கு வரக்கூடிய காணிக்கைகள் குறித்து, கோயில் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் குடும்பங்கள் அல்லது குழுக்களுக்கு முன்கூட்டியே ஏலம் விடுகின்றனர். அதற்கான புத்தகங்களில் முழுக் காணிக்கைகளும் பதிவு செய்யப்படுவதில்லை. கணக்கில் காட்டப்பட்ட மிகக் குறைவான தொகையைத் தவிர, காணிக்கையாக வருகிற நகை, தொகை முழுவதையும் அதை ஏலம் எடுத்த பார்ப்பனரே களவாடி விடுகிறார்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வார் என்பவர், நாகைப்பட்டினத்துப் பௌத்த விகாரை ஒன்றில், முழுவதும் தங்கத்தால் அமைக்கப்பட்டிருந்த புத்தரின் உருவ சிலையைத் திட்டமிட்டுத் திருடிக் கொண்டு போய்த் திருச்சி, திருவரங்கக் கோவில்

பணிகளுக்குப் பயன் படுத்தியுள்ளார் (மயிலை சீனி வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும், 2010, பக்கம் 43).

இந்தக் கொள்ளை தற்போது சமூக வலைத்தளங்களில் பெருமையாகப் பார்ப்பனர்களாலேயே பேசப்படுகிறது. தொன்று தொட்டுக் கொள்ளையடிப்பதுவே பார்ப்பனர்களின் தொழில் என்று அவர்களே வெளிப்படையாகவும், வெட்கமின்றியும் ஒப்புகின்றனர். இப்படி மறைமுகமாகக் கூட பஞ்சமர்களும், சூத்திரர்களும் சொல்லிவிட முடியாது.

கேரளாவில் உள்ள கோயில்களிலும் இதேநிலை தான் நிலவுகிறது. குருவாயூரில் உள்ள பார்த்தசாரதி கோயிலை, மலபார் தேவசம் போர்டு நிர்வாகம் செய்ய வேண்டும் என்று நீதிமன்றமே உத்தரவு பிறப்பித்த போதும், அதற்கு மதவெறியர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்று கேரள அரசின் தேவசம் போர்டு அமைச்சர் தெரிவித்துள்ளார் (தீக்கதிர், 17. 1. 2018).

இந்த நிலைதான் அரித்துவாரம், காசி, விந்தியாச்சல், கயா, பூரி, புவனேஸ்வர் உள்ளிட்ட புகழ்பெற்ற மதத்தலங்களில் உள்ள கோயில்களிலும் நிலவுகிறது. அதன் எல்லா உரிமைகளும் பண்டாக்களுக்கே இருக்கிறது. இந்தப் பண்டாக்கள் கையாளும் மிரட்டலும், உருட்டலுமான முறைகள் குறித்தும், வட இந்தியக் கோயில் பூசாரிகள் கோவில் பணத்தில் பங்கு மார்க்கெட்டில் புகுந்து விளையாடுவது குறித்தும், சி.பி. ராமசாமி ஐயரின் தலைமையிலான ஆணையம் 1962 இல் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

தென்னிந்தியக் கோயில்களில் ஊழல்களும், முறைகேடுகளும் இருந்தாலும் கூட, வட இந்தியாவில் உள்ள கோயில்களை விடத் தென்னிந்தியக் கோயில்கள் நன்கு நிர்வாகம் செய்யப்படுகின்றன என்பதையும் ராமசாமி ஐயர் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது. (நன்றி: ஹிந்து அறநிலையத் துறையை ஒழித்து கோயில்களின் நிர்வாகத்தைப் பார்ப்பனர்கள் கைப்பற்றத் துடிப்பதேன்? தொகுப்பாசிரியர் கி. வீரமணி, திராவிடர் கழக வெளியீடு, 2022).

இட ஒதுக்கீடு, சமூக விழிப்புணர்ச்சி, கல்வி வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாகத் தமிழ்நாட்டில் பட்டியல் சாதியினர் கோயில் நிர்வாகிகளாக உயர்ந்து, உயர்சாதிப் படிநிலையில் உள்ளவர்களுக்கும் சம்பளம் வழங்கும் தகுதி பெற்றவர்களாக உள்ளனர். சமூகநீதிப் போராட்டத்தின் பலனாக பெண்களும் செயல் அலுவலர்களாகப் பதவிக்கு வந்துள்ளனர். இப்படிப்பட்ட சமூகப் புரட்சியை முறியடிக்கவே, கோயில் நிர்வாகங்கள் பற்றித் திட்டமிட்ட அவதூறுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இதற்காக அறநிலையத் துறையை, 'அறம் இல்லாத துறை' என்ற பெயரில் முகநூல் பக்கம் ஒன்றை ஏற்படுத்தி, அதில் இந்து அறநிலையத்துறை ஆண், பெண் அலுவலர்களை வேசி மகன்கள், வேசி மகள்கள் என்று குறிப்பிட்டு, விரிவான பதிவுகள் இட்டுக்கட்டி அவர்களை உளவியல் ரீதியாக அந்த பணியின் மேல் வெறுப்புக் கொள்ளச் செய்கின்றனர். இப்படிப்பட்ட தாக்குதல்களுக்கு உள்ளான அரசு ஊழியர்கள் பதிலடி கொடுப்பது நடைமுறையில் சாத்தியமில்லை.

ஒன்றிய அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருக்கும் மதவெறிச் சக்திகள், மாநில உரிமைகளுக்கும், சமூக நீதிக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன. மக்களைக் குழப்புவதற்காகவே திட்டமிட்ட பொய்களை நாடு முழுவதும் இந்து மதவெறியர்கள் பரப்பிக் கொண்டு வருகின்றனர். இவர்களுக்குத் துணை போகவே பெரும்பாலான ஊடகங்கள் காத்திருக்கின்றன.

ஊழலும், கடமையும் குறிப்பிட்ட ஒரு மதத்துக்குத் தான் சொந்தமானது என்றில்லாமல் நாட்டில் உள்ள எல்லா மதங்களுக்கும் இடையே இதில் ஒற்றுமை நிலவுகிறது என்று இல்லஸ்டிரேட்டட் வீக்லி பத்திரிகை, 1972 ஆம் ஆண்டிலேயே கருத்துத் தெரிவித்துள்ளது.

அவ்விதழில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரை ஒன்றில், "கோயில் வருவாயின் பெரும் பகுதியும் திட்டமிட்ட முறையிலும், ஈனத்தனமாகவும் கையாடல் செய்யப்படுகிறது. பரம்பரை பூசாரிகள், பண்டாரங்கள், முத்திராதிகாரிகள், முத்தவல்லிகள், முஜாவர்கள், கிரந்திகளுக்கு அப்பணம் சென்று கொழுப்பு ஏற்றுகிறது. அவர்கள் எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும் அவர்கள் கடவுளுக்கும், பக்தர்களுக்கும்

இடையே நின்று பணம் பறிக்கும் இடைத்தரகர் கூட்டம் என்றே சொல்லலாம்" என்று அவ்விதழ் தெரிவிக்கிறது. (இல்லஸ்டிரேட்டட் வீக்லி ஆப் இந்தியா, *3. 9. 1972*).

கருவறையில் கொள்ளையர்கள் மட்டுமே இருப்பதில்லை, காமுகர்களும் உள்ளனர் என்பது அனைவரும் அறிந்த 'சிதம்பர ரகசியம்' தான். காஞ்சிபுரம் மச்சேச பெருமாள் கோவிலில் நடந்த காமலீலைகளைக் 'குருக்களின் காமராஜ்ஜியம்' என்ற தலைப்பில் ஜூனியர் விகடன் (9.12.2009) பத்திரிகையும், ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் கருவறையில் நடந்த காம லீலைகளை நக்கீரன் (27—29.3.2018) பத்திரிகையும், ஆதியோடந்தமாக வெளியிட்டன.

சாமி சிலைகள் திருட்டுப் போன கும்பகோணம் கோயிலில், சிலையைத் திருடிய பார்ப்பனர் கைது செய்யப்பட்ட செய்தியும் (மாலைமலர், 17.3.2022) மக்களை அதிர்வடையச் செய்யவில்லை. இதெல்லாம் வாடிக்கைதானே என்று சொல்லி விட்டு மறந்து போய் விடுகின்றனர்.



இப்படிக் கடவுள்களுக்கு என்று இருக்கின்ற ஒரு சமூக மரியாதை கூட இல்லாமல், "கடவுள் இல்லை; அது வெறும் கல்" என்பதை உணர்ந்தே இந்தப் பார்ப்பனக் கூட்டம் இம்மாதிரியான செயல்களில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள் என்பதை நினைத்துச் சமூகங்கள் தான் நாணுகின்றனவே தவிர, இந்தப் பார்ப்பனர்களுக்கும், இந்து என்று தங்களைக் கூறிக் கொள்பவர்களுக்கும் துளிக்கூட வெட்கம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

கோவில்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்றுப் பிற

மதத்தினரோ, கடவுள் நம்பிக்கை அற்றவர்களோ போராடவில்லை. மாறாக இந்துக்கள் தான் போராடினார்கள். அதுவும் பக்தியில் திளைத்த, நேர்மையான இந்துக்கள் மட்டுமே போராடினார்கள். பார்ப்பனர்கள் அடிக்கும் கொள்ளைகளையும், ஒழுங்கீனங்களையும் பொறுக்க முடியாமல்தான் இந்து பக்தர்கள் பொங்கி எழுந்து, அரசு தலையிட வேண்டும் என்று முன்வைத்த கோரிக்கையை அடுத்தே இந்து அறநிலையத்துறை உருவாக்கப்பட்டது.

இந்த உண்மையை அறியாமல் அல்லது அறிந்திருந்தும் தெளியாமல் இந்து அறநிலையத்துறை என்பது நாத்திகர்களின் கோரிக்கையால் உருவானதைப் போன்ற பொய்க் கருத்தை உருவாக்கிப் பரப்பி வருகிறது பார்ப்பனியம்.

பார்ப்பனர்களும், பிற உயர்சாதியினரும் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகக் கோயில்களைக் கொள்ளைக் கூடாரமாக மாற்றி, அனுபவித்து வந்ததுதான் இந்தியக் கோயில்களின் வரலாறாக இருக்கிறது. இப்படிப்பட்ட கொள்ளைக் கூட்டங்களை நேர்மையும், துணிவும் உள்ள அதிகாரிகள் பிடித்து நீதிமன்றங்களில்

நிறுத்தினால், நீதிமன்றத்தின் பூணூல் வளையத்தில் அவர்கள் நுழைந்து விடுகிறார்கள்.




அளவுக்கு அதிகமாக சொத்துக் குவிப்பில் பிழைக்கும் அறக்கட்டளை நிர்வாகிகள், தீட்சிதர்கள் மீது புலனாய்வுத் துறையோ, அமலாக்கத் துறையோ எந்த விசாரணையும் நடத்துவதில்லை. இது ஒரு மானமில்லாத பிழைப்பு என்று உயர் வர்க்கத்தினர் எண்ணுவதே இல்லை போலும். இந்நிலையில் இந்து அறநிலையத்துறையின் தேவையைப் பக்தர்கள் உணர்வது தான் அனைவருக்கும் நல்லது.

இந்து அறநிலையத்துறை சட்டம் (1924) இயற்றப்பட்டு ஒரு நூற்றாண்டு கழிந்த பின்னர், திடீரென்று இந்து அறநிலையத்துறையின் மூலம் கோயில்களை மாநில அரசாங்கங்கள் கையகப்படுத்தி விட்டன என்று பிரதமர் முதற்கொண்டு அடிபட்டத் தொண்டர் வரை ஆர்ப்பரிக்கின்றனர்.

கோவில்கள் முதற்கொண்டு, பாராளுமன்றம் வரையிலும் பார்ப்பனப் பரதேசிகளும், பண்டாரங்களுமே மலிந்திருக்கும் இந்து ராஷ்டிரம் அமைப்பதையே முழுமூச்சாகக் கொண்டு செயல்பட்டு வரும் மதவெறியர்களை அன்றாடம் பார்த்தும் கூட, பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு சற்றும் உரைக்கவில்லை என்றால், 2024 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மதவெறிச் சழக்கர்களை மாய்க்கவில்லை என்றால், மீண்டும் மத வெறியர்களுக்கு அடிமையாகப் போய்விடுவதென்னவோ திண்ணம். இந்து அறநிலையத் துறை தேவை! தேவை!! தேவை!!!

முனைவர் சிவ இளங்கோ, புதுச்சேரி
(14–01–26)

# 9. குறுந்தொகை 109

— அருள் மெர்வின்

இறால் மீனை வைத்து நான்கு வரிகளுக்கு மிகாமல் ஒரு காதல் கவிதை எழுதுக என்று தலைப்பு கொடுத்தால் என்ன எழுதுவோம்? இறந்தாலும் ருசிப்பது இறால் மீன், பிரிந்தாலும் ருசிப்பது எங்கள் காதல் என்பது போல ஏதாவது யோசிப்போம்.

சங்க காலத்தில் இந்த தலைப்பை 'நம்பி குட்டுவனார்' என்ற புலவரை நம்பி எழுதக் கொடுத்திருக்கிறார்கள். இவர் எதையும் வித்தியாசமாகச் சிந்திப்பதில் வல்லவர். ஆம்பல் பூ மலர்வதைப் பார்த்து காக்கா கொட்டாவி விடுவது போல் இருக்கிறது என்றெல்லாம் நற்றிணையில் எழுதியிருப்பவர் (சிறுவெண் காக்கை ஆவித்து அன்ன – 'ஆவித்தல்' என்றால் கொட்டாவி விடுதல்).

நம்பி குட்டுவனார் இறால் மீனை வைத்து எழுதிய நான்குவரி காதல் கவிதை:

*“முள் கால், முடங்கிய முதுகு, இறால் மீன்
கூட்டம்
கடலலையில் ஒதுங்கும் ஊர்க்காரன்!
இணைய இருந்த நேரத்தில்
இப்படி ஆகிவிட்டதே என் அழகான நெற்றி!”*

இந்த பாடலுக்கு ஒத்துக் கொள்ளும்படியான விளக்கம் ஏதும் இல்லை. ஏன் இல்லை என்பதை இங்கே விளக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

*“முள் கால், முடங்கிய முதுகு, இறால் மீன்
கூட்டம்
கடலலையில் ஒதுங்கும் ஊர்க்காரன்!
இணைய இருந்த நேரத்தில்
இப்படி ஆகிவிட்டதே என் அழகான நெற்றி!”*

மேலே நான் எழுதியிருப்பது உரைகளை வைத்து எழுதிய உரை. இந்த பாடலுக்கு வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் என்ன என்பதைத் தெரிந்து கொண்டால் இதை வாசிக்கும் நீங்களும் இதற்கு உரை எழுதிவிடலாம். ஒரு பேப்பரையும், பேனாவையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

முடக்கால் இறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி இகுதிரை தரூஉந் துறைவன்

புணரிய இருந்த ஞான்றும்
இன்னது மன்னோ நன்னுதற் கவினே.

முதல் வரியிலிருந்து ஆரம்பிப்போம். சங்க இலக்கியச் சொற்கள் எவ்வளவு எளிதானவை என்பது புரியும். 'முடக்கால்' என்றால் 'முடமான கால்' என்பது போல் எடுத்துக் கொள்ளலாம். இறால் மீனின் காலைப் பார்த்திருந்தால் தெரியும். 'இறவின்' என்றால் 'இறால் மீனின்' என்று அர்த்தம். சங்க இலக்கியங்களில் இறால் மீனை 'இறவு' அல்லது 'இறா' என்று அழைத்திருக்கிறார்கள். நாம் இன்று இறால் என்று சொல்கிறோம். சங்க காலத்தில் இறால் என்றால் தேனடை! 'முடங்கு புற' என்பது முடக்கால் போல. புறம் என்றால் முதுகு. இறால் மீனின் முதுகு கூன் விழுந்தது போல இருக்கும். கூனி மீன் என்று ஊர்ப்பக்கம் அழைப்பார்கள். 'கிளை' என்றால் மரக்கிளைகளை யோசித்துப் பாருங்கள். பல கிளைகள் சேர்ந்ததுதான் மரம். எங்களுக்கு வேறு எங்கும் கிளைகள் என்று சொல்லப்படும் கிளைகளை யோசித்துப் பாருங்கள். நம் சொந்தங்கள், பிள்ளைகள் எல்லோரும் நம் கிளைகள். சங்ககாலத்தில் 'கிளை' என்றால் கூட்டம். இங்கே 'கிளை' இறால்

மீன் கூட்டத்தைக் குறிப்பிடுகிறது. 'பெருங்கிளை' என்றால் பெரிய கூட்டம்.

*"முடக்கால் இறவின் முடங்குபுறப் பெருங்கிளை"*

இந்த வரிக்கான உங்கள் உரையை இப்போது எழுதிக் கொள்ளுங்கள். இனி, இரண்டாவது வரி.

'புணரி' இன்று புழக்கத்திலில்லாத சொல். புணர் என்ற வார்த்தை நினைவுக்கு வந்தால் ராங் ஆன்ஸர். 'புணரி' என்றால் 'அலை' என்ற அர்த்தத்தில் ஏகப்பட்ட சங்கப்பாடல்களில் உபயோகித்திருக்கிறார்கள். அவற்றுள் என்னை சிரிக்க வைத்த சொற்றொடர் ஒன்று இன்னொரு குறுந்தொகைப் பாடலில் வருகிறது (144). அலை அடிக்கும் போது அதன் மேல் விளிம்பில் வெள்ளையாக நுரை இருக்கும். ஹால்ஸ் மிட்டாய் கவரில் பார்த்திருப்பீர்கள். ஒரு புலவர் இந்த அலையைப் பார்த்து 'வெண் தலைப் புணரி' என்கிறார். அதாவது, நரைத்த தலை கொண்ட அலை! 'இகு' என்றால் 'தாழ்வாக' என்று அர்த்தம் சொல்வார்கள். 'திரை' என்றாலும் அலைதான். திரைகடல் ஓடி திரவியம் தேடு (என் பள்ளி ஆசிரியர் ஒருவர் பெயர் திரவியம்) என்பதிலுள்ள திரைகடல் = அலைகடல். 'புணரி இகுதிரை'

என்றால் ‘அலை தாழந்த அலை’ என்பது போல குழப்பும். கடலுக்குள் இருக்கும் அலையைத் திரை என்றும், கரையில் வந்து புணரும் (சேரும்) அலையைப் புணரி என்றும் வேறுபடுத்தியிருக்கிறார்கள்! இறால் மீன் கூட்டம் எப்படி கரைக்கு இழுத்துவரப்படுகிறது என்பதை விளக்க தாழ்ந்த அலை, கரைவந்து சேரும் அலை போன்ற சொற்கள் கோர்க்கப்பட்டிருக்கின்றன. ‘தரூஉம்’ என்றால் ‘தரும்’. செய்யுள்களில் தளை தட்டினால் இப்படி அளபெடை போட்டு அங்கங்கே இழுத்திருப்பார்கள். ‘துறைவன்’ என்றால் துறையைச் சேர்ந்தவன். அந்த கடற்கரை ஊர்க்காரன்.

*“புணரி இகுதிரை தரூஉந் துறைவன்”*

இந்த வரிக்கான உங்கள் உரையை இப்போது எழுதிக் கொள்ளுங்கள். இனி, மூன்றாவது வரி.

‘புணரிய’ என்றால் இப்போது உஷாராகி அலை என்பீர்கள். ராங் ஆன்ஸர். இது புணர்தல் சம்பந்தப்பட்டது. ‘புணர் இய’, புணர இசைய, புணர விரும்பிய என்று எடுத்துக் கொள்ளலாம்தான். ஆனால், உரையாசிரியர்கள் ‘புணரிய’ என்றால் சந்திக்க, அளவளாவ என்று

அர்த்தம் சொல்வார்கள். ‘இருந்த’ என்றால் ‘இருந்த’. ‘ஞான்றும்’ என்றால் திருக்குறள் வாசித்தவர்களுக்கு பிரபலமான வார்த்தைதான். ‘எஞ்ஞான்றும்’ என்ற சொல்லை எஞ்ஞான்றும் உபயோகிப்பார் வள்ளுவர். எப்போது பார்த்தாலும் தூங்குபவர்களைப் பார்த்து, “துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண் பவர்”, என்று கழுவி ஊற்றுவார். ‘எஞ்ஞான்றும்’ என்றால் ‘எப்பொழுதும்’. ‘ஞான்றும்’ என்றால்? பொழுதும்!

*“புணரிய இருந்த ஞான்றும்”*

இந்த வரிக்கான உங்கள் உரையை இப்போது எழுதிக் கொள்ளுங்கள். இனி, கடைசி வரி.

‘இன்னது மன்னோ’ என்ற சங்ககாலச் சொற்பிரயோகத்துக்குள் ஆழமாகச் செல்ல வேண்டாம். ‘இப்படி ஆகிவிட்டதே’ என்பதை சங்ககாலத்தில் ‘இன்னது மன்னோ’ என்றிருக்கிறார்கள். ‘நுதல்’ என்றால் ‘நெற்றி’. ‘நன்னுதல்’ என்றால் ‘நல்ல நெற்றி’. ‘கவின்’ என்றால் மாஸ்க் படத்தின் ஹீரோ.

*“இன்னது மன்னோ நன்னுதற் கவினே.”*

இந்த வரிக்கான உங்கள் உரையை இப்போது எழுதிக் கொள்ளுங்கள். அவ்வளவுதான். வேறு வரிகள் இல்லை.

ஏறக்குறைய நான் எழுதிய உரை மாதிரிதான் மொத்த பாடலுக்கும் உரை எழுதியிருப்பீர்கள். எல்லாச் சொற்களுக்கும், எல்லா வாக்கியங்களுக்கும் அர்த்தம் தெரிந்துவிட்டது. ஆனால், மொத்தமாக ஒன்றும் புரியவில்லைதானே? சேம் ப்ளட்.

உரையாசிரியர்கள் இந்த பாடலுக்கு என்ன விளக்கம் சொல்கிறார்கள்? தலைவன் தலைவியைத் திருமணம் செய்யக் காலம் தாழ்த்துகிறான். ஊரார் அலர் தூற்றுகிறார்கள். சங்க காலத்தில் ஊராருக்கு இதுதான் வேலை. அதனால் அவள் வருந்துவது நெற்றியில் தெரிகிறது. அதைப் பற்றி தோழி தலைவனுக்குக் கேட்கிறமாதிரி தலைவியிடம் சொல்வதுதான் இந்த பாடல். எல்லாம் ஓகே. ஆனால், ஏன் இந்த இறால் மீன்? நெற்றியில் அப்படி என்னதான் தெரிந்தது? நெற்றியில் பசலை வந்தது என்பார்கள். நாமும் எத்தனையோ விசித்திரமான பெண்களை வாழ்க்கையில் சந்தித்திருப்போம்.

நெற்றியில் பசலை வந்து யாரையாவது பார்த்திருக்கிறீர்களா?

“இன்னது மன்னோ நன்னுதற் கவினே” என்ற இந்த பாடலின் கடைசி வரிக்கு “இப்படி ஆகிவிட்டதே ‘என்’ அழகான நெற்றி!” என்பதாக எழுதியிருந்தேன். உரைகளில் ‘உன்’ நெற்றி என்றிருப்பார்கள். குறுந்தொகை வரியில் உன், என் என்று எந்த குறிப்பும் இல்லை. “இப்படி ஆகிவிட்டதே நல்ல நெற்றியின் அழகு!” என்பதுதான் அதன் அர்த்தம். சங்க இலக்கியங்களுக்கான உரைகள் சங்ககாலம் முடிந்து ஐநூறு, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் எழுதப்பட்டவை. மேலே உள்ள பாடலுக்கு உரையாசிரியர்கள் கொடுத்த விளக்கவுரை ஒரு பொதுவான விளக்கமளிக்கும் டெம்ப்ளேட்டைப் பின்பற்றியது. வெறும் பாடலை மட்டும் எடுத்துக் கொண்டு அதற்கு நீங்கள் எழுதியிருக்கும் உரையை வைத்தே வாசியுங்கள். நாட்டில் எந்த சம்பவம் நடந்தாலும் அதற்கொரு டெம்ப்ளேட்டை வைத்துக்கொண்டு விளக்கமளிக்கும் ஐடி விங்க் ஐடிகள் போல் ஒரு விளக்கவுரையை உரையாசிரியர்கள் பரப்பியிருக்கிறார்கள் என்றுதான் தோன்றும்.

என் ஊர் கடலுக்கு அருகாமையில் உள்ளது. சிறுவயதில் எல்லா வீட்டிலும் தினமும் மீன் குழம்பு வைப்பார்கள். ஆனால், இறால் மீன் குழம்பு வைத்துப் பார்த்ததில்லை. அந்தகாலத்தில் அந்த பகுதியில் கடலுக்குச் செல்பவர்கள் இறால் மீன் சிக்கினால் பூச்சி மீன் என்று கடலுக்குள்ளேயே தூக்கி வீசிவிடுவார்கள் என்று சொல்லியும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இது பொதுவான பழக்கமல்ல என்பதையும் அறிவேன். இறால் மீன் சாப்பிடும் பழக்கம் பல இடங்களில் ரொம்பகாலமாக இருந்திருக்கலாம். ஆனால், சங்க இலக்கியங்களில் இறால் மீன் அடிக்கடி வந்தாலும் அதை அவர்கள் சாப்பிட்ட மாதிரி குறிப்புகள் ஏதும் இல்லை. பெரும்பாலும் பறவைகள் இறால் மீனைச் சாப்பிட்ட மாதிரிதான் எழுதியிருக்கிறார்கள். சொரசொரப்பை விளக்க உவமைகளில் உபயோகித்திருக்கிறார்கள். மேலே உள்ள குறுந்தொகைப் பாடலிலும் இறால் மீனைப் புகழ்ந்த மாதிரி தெரியவில்லை. உருவக்கேலி செய்த மாதிரிதான் தெரிகிறது. முடக்கால், முடங்குபுறம் கொண்ட இறால் மீன். ஒருவேளை, அவளுக்கு அவனை இணையும் நேரத்தில் ஏதோ பிடிக்காமல் அருவருப்படைந்து நெற்றியைச் சுருக்கியிருக்கலாம். இறால் மீன் போல.

அல்லது, இங்கே இறால் மீன் ஓர் உவமையே இல்லாமல் கூட இருக்கலாம். உண்மையிலேயே அவன் இறால் மீன் கரையில் ஒதுங்கும் துறைவனாக இருந்திருக்கலாம். அவனைப் பார்த்து இவள் ஆசைப்பட்டிருக்கலாம். பின் முகத்தைச் சுழித்திருக்கலாம். *As simple as that.* சங்க கால மக்களுக்கு இதைவைத்து ஆள் யாரென்று தெரிந்திருக்கலாம். இந்த பாடலை எழுதிய நம்பி குட்டுவனார் உவமையே இல்லாமல் வேறொரு பாடலை எழுதியிருக்கிறார்.

மொத்தத்தில் இந்த பாடல் சொல்லவருவது என்னவென்றால்... இதுபோன்ற சங்கப்பாடல்களை உங்கள் மனதில் அசை போட்டால் உங்களுக்கான ஒரு பொருள் கிடைக்கும். அதுதான் அதன் பொருள். அதைத்தவிர வேறு ஒரு பொருளுமில்லை.

— அருள் மெர்வின் (13—01—26)

# 10. இலக்கியத்தில் பொங்கல்

— முனைவர் தேமொழி




சங்க இலக்கியங்களில் பொங்கல் குறித்த செய்திகள் உள்ளனவா என்ற தேடலில் கிடைத்த செய்திகள் இக்கட்டுரையில் இடம் பெறுகிறது. இத்தேடலுக்கு உறுதுணையாக நின்றது **முனைவர். ப.பாண்டியராஜா** அவர்கள்

உருவாக்கிய **தமிழ் இலக்கியத் தொடரடைவு தளம்** [http://tamilconcordance.in/index.html].

**இலக்கியப் பொங்கல்:**

*பொங்கல் வெண்மழை* (நெடு 19, அகம் 217), *பொங்கல் இளமழை* (ஐங் 276) என மழை கொட்டி முடித்த பஞ்சு போன்ற வெண்மேகத்தையும்; போகில் *பிளந்திட்ட பொங்கல் வெண்காழ்* (அகம் 129) என்று வெடித்து இருக்கும் வெண் பஞ்சையுமே பொங்கல் என்ற சொல்லுடன் தொடர்பு கொண்டதாக சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. இதிலிருந்து "நுரைபோல பொங்கும் வெண்பஞ்சு போன்ற தோற்றம் கொண்டது 'பொங்கல்' என்ற சொல்லின் விளக்கமாகக் கொள்ளலாம்", பொங்கி எழுவது பொங்கும் அலை போன்றவற்றையும் பொங்கு, பொங்கி என்ற சொற்கள் குறிப்பிடுகின்றன.

மாமூலனார் எழுதிய பாடல் (அகநானூறு –393) ஒன்று வரகரிசிப் பால் பொங்கல் செய்யும் முறையை விளக்குவதையும் காண முடிகிறது.

## 393. புழுக்கிய பொங்க அவிழ் புன்கம்

பால் பொங்கல்

*. . . முதைச் சுவல் கலித்த ஈர் இலை நெடும் தோட்டுக்*
*கவைக் கதிர் வரகின் கால் தொகு பொங்கழி*
*கவட்டு அடிப் பொருத பல் சினை உதிர்வை*
*அகன் கண் பாறைச் செவ் வயின் தெறீஇ*
*வரி அணி பணைத் தோள் வார் செவித் தன்னையர்*
*பண்ணை வெண் பழத்து அரிசி ஏய்ப்பச்*
*சுழல் மரம் சொலித்த சுளகு அலை வெண் காழ்*
*தொடி மாண் உலக்கை ஊழின் போக்கி*
*உரல் முகம் காட்டிய சுரை நிறை கொள்ளை*
*ஆங்கண் இரும் சுனை நீரொடு முகவாக்*
*களி படு குழிசிக் கல் அடுப்பு ஏற்றி*
*இணர் ததை கடுக்கை ஈண்டிய தாதின்*
*குடவர் **புழுக்கிய பொங்கு அவிழ் புன்கம்***
***மதர்வை நல் ஆன் பாலொடு பகுக்கும். . .***

[—அகநானூறு –393 பாலை; மாமூலனார்]

**பாடலின் பொருள் விளக்கம்:**

புதுக்கொல்லையில் தழைத்து, ஈரிய இலையின் நீண்ட இதழையுடைய வரகின் கவர்த்த கதிருடன் கூடிய தட்டைகளைத் தொகுத்த பொலியில், மாடுகட்டிப் போரடித்து, மாடுகளின் கவர்த்த குளம்பால் துவைக்கப் பட்ட பல கிளைகளினின்று உதிர்ந்த வரகினை, இடம் அகன்ற பாறையில் செவ்விய களத்து மேட்டில் குவித்து, அவற்றைத் தூற்றி, வரிகள் பொருந்திய பருத்த தோள்களை உடைய தந்தையும் தமையன்மாரும் சுமந்து கொண்டுவந்து அளிக்க, நீண்ட செவிகளையுடைய தாயார், பண்ணைக்கீரையின் வெள்ளிய பழத்தின் அரிசியை ஒப்ப, அவற்றைத் திரிகையால் திரித்து உமியைப் போக்கி, சுளகினால் கொழித்த வெண்மையான அரிசியை, சிறந்த பூண் அமைந்த உலக்கையினால் மாற்றிமாற்றிக் குத்தி உரலில் இட்டுத் தீட்டிய, உரலின் குழி நிறைந்த அரிசியை, அங்குள்ள பெரிய சுனையின் நீரோடு முகந்து, மண்ணாற் செய்த பானையில் கற்களை அடுக்கியமைத்த அடுப்பில் ஏற்றி, கொத்துக்கள் நிறைந்த கொன்றையின் நிறைந்த பூந்தாது போல, குடவர் ஆக்கிய விளங்குகின்ற

அவிழாகிய பொங்கல் சோற்றை, மதர்த்த நல்ல பசுவின் பாலுடன் கூட்டிப் பகிர்ந்து தருவர்.

குறிப்பு: இந்தப் பொங்கலைப் பொங்கல் நாளன்று செய்தார்கள் என்ற குறிப்பு பாடலில் கொடுக்கப்படவில்லை. பொருள் தேடி வேற்றுப் புலம் செல்லும் வழிப்போக்கர்களின் பசி தீர்க்க குடவர் மக்கள் வரகரிசிப் பால் பொங்கல் செய்து பரிமாறுகிறார்கள். ஆக, வரகரிசிப் பால் பொங்கல் செய்முறை விளக்கமாக இது அமைகிறது.

– முனைவர் தேமொழி (14/1/2026)

# 11. வள்ளுவமும் எண்ணியலும்

— யாழ்க்கோ

எண்கள் என்பது மனித வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் இன்றியமையாத ஒரு பகுதியாகும். நம் தொல்குடிகள் கரங்களையும், கால்களையும், விரல்களையும், விழிகளையும் எண்களைக் கையாள்வதற்கான அடிப்படை மூலங்களாய்ப் பயன்படுத்தியுள்ளனர். எண்களை எண்ணத்தின் வைப்பகத்தில் தொகுத்து வைத்தனர். தொகுத்தவற்றையெல்லாம் எழுத்தால் தொடுத்துச் சொல்லாக்கினர். இதனையே "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப" (குறள் 392) என்னும் குறட்பாவில் எண்களின் முக்கியத்துவம் எக்காலத்திற்கும் பொருந்தும்படி எழுதுண்ட மறையில் எடுத்துரைக்கின்றார் வள்ளுவர். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" (கொன்றை வேந்தன்.7) என்ற ஔவையார் வாக்கும் வள்ளுவன் சிந்தனையை உறுதிப்படுத்துகிறது. எண்ணுப் பெயர்களை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, நூறு, ஆயிரம், கோடி எனத் தமிழில் வழங்குவதுண்டு. இத்தகைய எண்ணுப் பெயர்களில் ஒன்பது மட்டும் திருக்குறளில்

இடம்பெறவில்லை. ஏனைய 12 எண்ணுப் பெயர்களையும் முதற்பாவலர் முப்பாலில் குறிப்பிட்டுள்ளதை தெரிந்துகொள்வதிலே நாம் இன்பம் அடையலாம்.

## உத்திரவேதத்தில் ஒன்று

மாமிசப் பிண்டங்களாக மண்ணில் பிறந்த நாம் உன்னதம் நோக்கி நம்முடைய வாழ்வை உயர்த்திக் கொள்ள வேண்டும். அறிவையும், அனுபவத்தையும் பெருக்கிக் கொண்டு நிகழ்த்தக்கூடிய சாதனைகள் மூலம் ஒருவனுக்கு வந்துசேர்வதுதான் புகழ். புறநானூற்றுப் பாடல் ஒன்றில் “மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே;” என்று பாடியுள்ளார் பெருந்தலைச் சாத்தனார். நிலைபெறாத இவ்வுலகில் நிலைபெற நினைத்தவர்கள், தம் புகழை நிலைநாட்டி இறந்தனர் என்று பொருளுணர்த்தும் பாடல் இது. அ.ப.ஜை. அப்துல் கலாம் அவர்கள் தன்னம்பிக்கையாலும், விடாமுயற்சியாலும் படிப்படியாக முன்னேறி எழுச்சி நாயகனாக எல்லோராலும் போற்றப்பட்டார். தன்னுடைய அறிவியல் ஆராய்ச்சியால், இந்தியாவை வல்லரசாக மாற்றி உலக நாடுகளை வியப்பில்

ஆழ்த்தினார். இந்தியாவின் உயரிய பதவியில் இருந்தபோதும் எளிமையின் அடையாளமாகவும், தன்னடக்கத்துடனுமே திகழ்ந்தார். தன்னலம் துறந்து மண்நலம் சார்ந்து பணியாற்றிய அவரது உடலை மண்ணில் புதைத்துவிட்டோம். அவரது புகழை மனத்தில் இருத்திக் கொண்டோம். இதனை

*ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்*
*பொன்றாது நிற்பதொன் றில். (குறள் 233)*

என்றோதுகிறார் வான்புகழ் வள்ளுவர். ஒப்பற்றதாகவும், அழிவில்லாததாகவும் இந்த உலகத்தில் நிலைத்திருப்பது புகழைத் தவிர வேறு எதுவுமே இல்லைபென்பதனை இக்குறள் அழகுற அளிக்கிறது. வாழ்க்கையைப் பற்றி உணர்ந்தவர்கள், ஒரு நாள் என்பது ஒருவரின் ஆயுளை அறுத்துக் குறைத்துக் கொண்டேயிருக்கும் வாள் என்று அறிவார்கள் என நேரமேலாண்மையின் மகத்துவத்தை

*நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்*
*வாளது உணர்வார்ப் பெறின். (குறள் 334)*

என்ற குறட்பாவில் ஒன்றின் பொருளை உலகிற்கு உரைக்கிறார் முதற்பாவலர். உத்திரவேதத்தில் பயன்படுத்தப்பட்ட எண்ணுப் பெயர்களில் எண் ஒன்று *51* இடங்களில் வந்துள்ளன. அவற்றை பின்வரும் குறட்பாக்களில் வான்புகழ் வள்ளுவர் அழகுற அளிக்கின்றார். குறள் எண். *1, 109, 111, 118, 128, 148, 155, 156, 221, 232, 233, 251, 253, 259, 281, 291, 300, 334, 344, 397, 398, 400, 438, 454, 609, 661, 773, 805, 835, 836, 838, 871, 875, 932, 971, 974, 1006, 1007, 1023, 1026, 1052, 1095, 1146, 1196, 1197, 1202, 1266, 1269, 1273, 1274, 1275.*

## இரண்டில் இரண்டு

ஏடும் எழுத்தாணியும் கொண்டு இரண்டு அடியில் எழுதப்பட்ட திருக்குறளை விஞ்சுவதற்கு இதுவரை எந்த நூலும் எழுதப்படவில்லை. மனிதர்கள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய விழுமியக் கருத்துக்கள் யாவற்றையும் ஒருங்கே கூறம் நூல் திருக்குறள். இரண்டடி அறிவுத்திரட்டுக்களாய் திருக்குறள் தனிச் சிறப்புப் பெற்று விளங்குவதால், நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி (பெருந். *1128*), பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் (தனிப். 68) என்பன சான்றோர் வாக்குகள். இதனால்

திருக்குறள் இரண்டு எனச் சிறப்புப் பெயர் பெற்றுள்ளது. திருக்குறளில் பயன்படுத்தப்பட்ட எண்ணுப் பெயர்களில் எண் ‘இரண்டு’ *18* இடங்களில் வந்துள்ளன. எண் இரண்டு பற்றிக் கூறும் குறட்பாக்கள்: குறள் எண். *19, 374, 392, 393, 402, 455, 581, 662, 674, 760, 875, 920, 992, 1022, 1091, 1108, 1196, 1247.*

## முப்பாலில் மூன்று

உலக அளவில் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே வருவதால், நிலப்பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால், விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக விரிவாக்கம் பெறுகின்றன; மரங்கள் அழிக்கப்படுகின்றன; வறட்சியால் குடிநீர் தட்டுப்பாடு மற்றும் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. சுற்றுச் சூழல் சீர்கேடுகள் ஏற்படுகின்றதன. பல்வேறு நோய்கள் எளிதில் பரவுகின்றன. சுகாதாரப் பிரச்சினையும் வேலையின்மையும் நாட்டை நலிவடையச் செய்கின்றன. அனைவருக்கும் தரமான கல்வி என்பது கேள்விக் குறியாகின்றது. இவற்றையெல்லாம் சீர்படுத்துவதற்காக மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை

வலியுறுத்தி பல நாடுகள் தீவிரம் காட்டிவருகின்றன. அளவான குடும்பமே வளமான வாழ்வுக்கும் ஆளும் அரசுக்கும் அடிப்படையென்பதனை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தன் குறட்பாவில், மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று. (குறள் 941) என்றோதுகிறார் முதற்பாவலர். ஒருவனுடைய உணவும் செயல்களும் அளவுக்கு மேல் கூடினாலும், குறைந்தாலும், மருத்துவ நூலோர் வகுத்த மூன்றும் நோயைச் செய்யும் என்று எடுத்துக் கூறுகிறது இக்குறள்.

சமகாலப் பிரச்சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் திருக்குறள் உள்வாங்கியிருப்பதுதான் விந்தையிலும் விந்தை. முப்பாலில் பயன்படுத்தப்பட்ட எண்ணுப் பெயர்களில் எண் ‘மூன்று’ 10 இடங்களில் வந்துள்ளன. அவற்றில் உள்ள விழுமியக் கருத்துக்களை பின்வரும் குறட்பாக்களில் அறியலாம். குறள் எண். 41, 360, 383, 589, 682, 684, 688, 941, 952, 1085.

## திருமறையில் நான்கு

மக்களாட்சியில் மக்களை வழி நடத்தும் ஆட்சியாளர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்; ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய மக்கள் கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் எவை என்பன பற்றிய தேர்தல் விழிப்புணர்வுகளை தேர்தல் ஆணையம் அவ்வப்போது வாக்களர்களுக்கு வழங்கிக் கொண்டே வருகிறது. அறத்தைக் காக்க உறுதியாகவும், பொருள் வகையில் நாணயமாகவும், இன்பத்திற்கு மயங்காதவனாகவும், தன்னுயிருக்கு அஞ்சாதவனாகவும் இருக்கும் ஒருவனை வாக்களித்துத் தேர்வு செய்ய வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவனால்தான் பொதுப் பணியில் ஊழலற்ற நிர்வாகத்தைத் திறம்படச் செயல்படுத்த முடியும். இதனை, தான் தோன்றிய காலத்திற்கு மட்டுமல்லாமல் எக்காலத்திற்கும் ஏற்புடையதாக

*அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்*
*திறந்தெரிந்து தேறப் படும். (குறள் 501)*

என்னும் குறட்பாவில் பெருநாவலர் பாங்குறப் பகிர்கின்றார். திருமறையில் பயன்படுத்தப்பட்ட எண்ணுப் பெயர்களில் எண் 'நான்கு' 11 இடங்களில் வந்துள்ளன. அவற்றில் உள்ள ஆழ்ந்த பொருளைக் கூறும் குறட்பாக்கள்: குறள் எண். *35, 146, 382, 390, 501, 513, 605, 743, 766, 950, 953.*

## வான்மறையில் ஐந்து

காடுகளுக்குள் ஆடிய சூதாட்டம், அடுத்த கட்டமாக அரண்மனைக்குள் வந்தது; வியர்வை சிந்தாக் காலங்களில் வீதிகளுக்குள் வந்தது; விஞ்ஞான வளர்ச்சியால் தற்பொழுது வீட்டிற்குள்ளேயே வந்துவிட்டது. சூது மயக்கத்தில் குடியை இழந்தார்கள்; கோலோச்சிய நாட்டை இழந்தார்கள். இப்பொழுது இணையத்தளத்தில் சூது விளையாடி இன்னுயிரையும் மாய்த்துக் கொள்கிறார்கள். அவற்றிலிருந்து பலர் மீள முடியாமல் செல்வம், புகழ், கல்வி அனைத்தையும் தவறவிட்டு, வாழ வழியின்றி வாடிநிற்கின்றனர். இதனை உணர்த்தும் வகையில்

*உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்*
*அடையாவாம் ஆயங் கொளின். (குறள் 939)*

என்ற குறளில் ஒருவன் சூதாடுதலை மேற்கொண்டால், புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தும் அவனைச் சேராமல் ஒதுங்கும் என்று சுட்டுகிறார் தெய்வப்புலவர். இன்றைய 5ஜி அலைக்கற்றை சேவையில் விளையாடும் சூது அபாயத்தை, எழுத்தாணி முனையில் எச்சரித்துள்ளார் பொய்யாமொழிப் புலவர்.

வான்மறையில் பயன்படுத்தப்பட்ட எண்ணுப் பெயர்களில் எண் 'ஐந்து' 14 இடங்களில் வந்துள்ளன. ஐந்தின் மகத்துவத்தை கூறும் குறட்பாக்கள்: குறள் எண். 6, 24, 25, 27, 43, 126, 271, 343, 632, 675, 738, 939, 983, 1101.

## பொருளுரையில் ஆறு

வீரம் மிக்க படை, நாட்டுப்பற்று மிக்க மக்கள், குறையாத செல்வம், நாட்டின் நலம் அறிந்து செயல்படும் அமைச்சர், துன்பத்தில் உதவும் அண்டை மாநில நட்பு, அழிக்கமுடியாத காவல் ஆகிய ஆறும் நாட்டை ஆளும் அரசுகளில் சிங்கம் போன்றதாகும் என்கிறது குறள். (குறள் 381)

## எழுதுண்டமறையும் ஏழும்

ஏழு என்ற எண்ணிற்கும் எழுதுண்டமறைக்கும் உள்ள தொடர்புகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. முப்பாலில் குறட்பாக்களின் எண்ணிக்கை 1330. இதன் கூட்டுத்தொகை ஏழு ஆகும். குறள் வெண்பா ஏழு சீர்களைக் கொண்டது. திருவள்ளுவர் என்பதும் ஏழு எழுத்துகளால் ஆன சொல். வள்ளுவர் வாய்மொழியின் சொற்சுருக்கத்தினையும் பொருட்பெருக்கத்தினையும் விளக்கும் வகையில் “கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்” என்று இடைக்காடரும், “அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்” என்று ஔவையாரும் புகழ்ந்து பாடிய வள்ளுவமாலையில் வரும் சீர்களின் எண்ணிக்கையும் ஏழு ஆகும். ஏழு என்ற எண்ணிற்கும் எழுதுண்டமறைக்குமான தொடர்பை விவரித்துக் கொண்டே செல்லலாம். எண் ஏழு பற்றி கூறும் குறட்பாக்கள்: குறள் எண். 62, 107, 126, 398, 538, 835, 1269, 1278.

## குறளமுதில் எட்டு

“கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்” (குறள்.9) என்ற குறளில் தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கி நிற்றல், இயற்கை உணர்வினன் ஆதல், பேரறிவுடைமை அல்லது முற்றறிவுடைமை, வரம்பில்லாத ஆற்றல் உடைமை, வரம்பில்லாத அருள் உடைமை, வரம்பில்லாத இன்ப வடிவினன் ஆதல் ஆகிய எட்டு குணங்களைப் பற்றிப் பகிர்ந்துள்ளார் மாதானுபங்கி.

## பொதுமறையில் பத்து

குறள் எண் 450 – இதில் எண் பத்து இடம்பெற்றுள்ளது.

*பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே*
*நல்லார் தொடர்கை விடல்.*

பலரோடும் பகைத்துக் கொள்வதை விட, நல்லோருடன் கொண்ட தொடர்பைக் கைவிட்டு விடுதல் என்பது பலருடைய பகையைத் தேடிக்

கொள்வதை விடக் கேடு விளைவிக்கக் கூடியதாகும் என்மனார் வள்ளுவர்.

**திருமறையில் நூறு**

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்று எண் நூறைப் பயன்படுத்தி விளக்கிய குறள்.932 ஆகும்.

*ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும்*
*உண்டாங்கொல்*
*நன்றெய்தி வாழ்வதோர் ஆறு.*

பெறுவோம் என்னும் ஆசையால் நூற்றுக்கணக்காக இழந்து வறியவராகும் சூதருக்கு, வாழ்க்கையில் நலம் ஏற்பட வழி ஏது? என்று எச்சரிக்கின்றார் தெய்வப்புலவர்.

**அறம் கூறும் ஆயிரம்**

குறள் 259 – உயிரின் உன்னதத்தை எண் ஆயிரம் கொண்டு எடுத்துரைக்கும் குறள்.

*அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று.*

அவிகளைத் தீயில் போட்டு ஆயிரம் வேள்வி செய்வதைக் காட்டிலும், ஒன்றன் உயிரைக் கொன்று, அதன் உடலைத் தின்னாமலிருத்தல் மிகவும் நன்மையானதாகும் என்று எல்லோருக்கும் எடுத்தோதுகின்றார் நாயனார்.

**குறளமுதில் கோடி**

உலகப் பொதுமறையில் எண் கோடி இடம்பெற்ற குறட்பாக்கள்: குறள் *337, 377, 639, 816, 817, 954, 1005, 1061.*

**முடிவுரை**

உலகில் இன்புற்றும் துன்புற்றும் வாழந்து இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று நம்மால் கூற இயலாது. அதுபோல உண்மையாகவே பற்றுகளைத் துறந்தவர்களின் பெருமையையும் நம்மால் அளவிடவே முடியாது

*துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து*
*இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. (குறள் 22)*

என்று எண்ணிக்கைக்கு முடிவில்லை என்பதை அனைவருக்கும் உணர்த்துகிறது. வள்ளுவரின் எண்ணத்தில் தோன்றிய எண்களைப் பற்றிச்

சுருக்கமாகவே விளக்கத்தைத் தந்து, சுருக்கி விரித்து நிறைவு செய்யப்படுகின்றது.

– யாழ்க்கோ (14–01–2026)

# 12. மயிலாப்பூரும் முஸ்லிம்களும்

— கோம்பை அன்வர்

இந்த வருட மைலாப்பூர் திருவிழாவில், "மயிலாப்பூரில் இஸ்லாமியரின் வரலாற்றையும் பண்பாட்டையும், ஒரு மரபு நடையின் மூலமாக சொல்ல முடியுமா?" என்று நண்பர் வின்சென்ட் Vincent D Souza கேட்டுக் கொண்ட போது உடனடியாக ஒப்புக் கொண்டேன். ஏனென்றால் சென்னையிலேயே இஸ்லாமியருக்கு நீண்ட வரலாறு ஒன்று உள்ளது என்றால் அது மயிலாப்பூராகத்தான் இருக்கும். மயிலாப்பூரில் கிறித்துவம், சமணம், பவுத்தம், சைவம், வைணவம், இஸ்லாம் என்று ஒவ்வொரு மதத்திற்கும் ஆயிரம் வருடங்களுக்கும் மேலான சமய வரலாறு உள்ளது. இயேசு கிருத்துவின் சீடர்களில் ஒருவரான புனித தாமஸ் இங்கு அடங்கி இருந்ததை 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அரபு புவியியல் ஆய்வாளர்கள் (geographers) மற்றும் அரபு பயணிகளின் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

தமிழ் மூவேந்தர்களின் ஆட்சியில் வணிகம் செய்து வந்த 'அஞ்சுவண்ணம்' என்ற

இஸ்லாமியர், யூதர், கிறித்தவரை உள்ளடக்கிய பண்டைய வணிகக் குழுவின் 13 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு, மணிக்கிராமம் என்ற மற்றொரு உள்நாட்டு வணிகக் குழுவுடன் மயிலாப்பூரில் கிடைத்ததாக மறைந்த தொல்லியல் ஆய்வாளர் ரா நாகசாமி, சென்னை மாநகர் கல்வெட்டுக்களில் பதிவு செய்துள்ளார்.

அதே 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகம் வந்த வெனீசிய வணிகன் மார்கோபோலோ, புனித தாமஸ் அடங்கியிருக்கும் இடம் என்பதற்காக, சீனாவில் இருந்து கடல் மார்க்கமாக வெனீஸ் செல்ல வேண்டியவன், மைலாப்பூரை தொட்டுச் செல்லுமாறு தனது கடல் பயணத்தை மாற்றியமைத்திருக்கின்றான். அப்போதே மயிலைக்கு புனித தாமஸிற்கு மரியாதை செலுத்த கிருத்துவர்களும் இஸ்லாமியரும் புனித யாத்திரை செல்லும் இடம் என்று குறிப்பு எழுதுகிறான். சுவாரஸ்யம் என்னவென்றால் மார்க்கோபோலோவின் காலகட்டத்தில் மேற்கு ஆசியாவில் கிறித்துவர்களுக்கும் இஸ்லாமியருக்குமிடையே மத ரீதியான சிலுவைப் போர்கள் (Crusades) நடந்து கொண்டிருந்த காலகட்டம். மதப் போர்வையில் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின்

வெளிப்பாடே மேற்கு ஆசிய நாடுகளின் மீது தொடுக்கபப்ட்ட போர் அது.

ஆனால் இயேசு பிரானை ஈசா நபி என்றழைக்கும் இஸ்லாமியருக்கு, அன்றைய தமிழகத்தில், ஈசாவின் சீடரான புனித தாமஸின் உறைவிடமும் புனிதம் என்றே கருதினர். புனித தாமஸின் கல்லறைதான் போர்துகீசியர்களை மயிலைக்கு கொண்டு வந்தது. அப்போது வந்த போர்த்துகீசிய வரலாற்றுப் பதிவாளரான துவார்த்தே பார்போசா, புனிதரின் கல்லறையை ஒரு ஏழை இஸ்லாமியர் பராமரித்து வந்ததாகத் தெரிவிக்கின்றார். ஆனால் போர்த்துகீசியரின் வரவு மயிலையில் உள்ள இந்துக்களை, குறிப்பாக இஸ்லாமியரை கடுமையாக பாதித்தது. பழவேற்காடு இஸ்லாமியரிடம் உள்ள அர்வி (அரபுத் தமிழ்) ஆவணத்தில், அதே கால கட்டத்தில் மைலாப்பூரில் வியாபாரம் செய்ய முடியாமல் பழவேற்காடுக்கு குடி பெயர்ந்த முஸ்தபா மரைக்காயரைப் பற்றிய குறிப்பு உள்ளது.

போர்த்துகீசியரின் அடாவடிச் செயல்களை தட்டிக் கேட்ட விசயநகர ஆட்சியில் மீண்டும் முஸ்லிம்கள் சாந்தோம் ஒட்டி குடியேறியிருக்க

வாய்ப்புண்டு. விசயநகர மற்றும் நாயக்கர் ஆட்சியில் பல இஸ்லாமியர்கள் அரசு பதவி வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1640களில் மெட்ராஸ் மற்றும் அருகிலுள்ள சாந்தோம் ஆகியவை கோல்கொண்டா சுல்தான்களின் ஆளுகைக்கு கீழ் வந்தது. கோல்கொண்டாவின் பல தளபதிகள் தெலுங்கு பேசும் இந்துக்கள் என்பதை கிழக்கிந்தியக் கம்பெனி பதிவுகள் வியப்புடன் சுட்டிக் காட்டுகின்றன.

போர்துகீசியருடனான சாந்தோம் போரில், தலை துண்டிக்கப்பட்ட கோல்கொண்டா குதிரை வீரர் புத்து சாகிபின் தர்கா பல்லாவரத்தில் இருக்கின்றது. 1687இல் கோல்கொண்டா ஆட்சியை அவுரங்ககசீப் முடிவுக்கு கொண்டு வர, சென்னை முகலாயர் ஆளுகையின் கீழ் வந்தது. சென்னையில் முகலாய தளபதியான நவாபுகளின் தங்குமிடமாக மயிலாப்பூர் மாறியது. கச்சேரி சாலையில் உள்ள ஜும்மா பள்ளிவாசல் 1699ல் கட்டப்பட்டதாக பள்ளியில் உள்ள பார்சி கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

1750களில் சென்னை வந்து போய்க் கொண்டிருந்த முகம்மது அலி வாலாஜா, கச்சேரி சாலை பள்ளிவாசலுக்கு எதிராக தனது

இருப்பிடத்தை அமைத்திருந்தார். அவர் வசித்த தெருவுக்கு அவரது பட்டப் பெயர்களால் ஒன்றான 'டியோடி சர்தார் –உல்–முல்க் திலாவர் ஜங்' என்று சென்னை மாநகராட்சிப் பதிவேடுகளில் பதிவாகி இருப்பதை வி ஸ்ரீராம் (V. Sriram) தனது பேட்டிகளில் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் 'டியோடி' என்பது பார்சி/உருது மொழிகளில் ஒரு மாளிகை அல்லது அரண்மனைக்கான நுழைவு வாயில் என்பதாக அர்த்தம் என்பதையும் விளக்குகிறார். காலத்தின் கோலம், இன்று 'டியோடி', 'தேவடி'யாக மருவி வேறொரு வாழ்க்கை முறையை ஞாபகப்படுத்துவதாக உள்ளது.

தேவடி தெரு சிறிது தூரத்தில் அப்பு தெரு என்று பெயர் மாறுகிறது. அங்கு நவீன அடுக்ககங்களுக்குள் இடையே நுழைவதற்கு ஒரு சின்ன பாதையோடு கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றது 'சார் சமன்' பள்ளிவாசல். 'சார் சமன்' என்றால் 'நான்கு தோட்டம்'. ஒரு காலத்தில் நான்கு தோட்டங்களுஊக்கு நடுவே அமைந்திருந்த பள்ளி இன்று மூச்சு விடத் திணறும் அளவுக்கு சுற்றிலும் கட்டிடங்கள். பள்ளியின் உள்ளே அழகான மூன்று குவிமாடங்கள். நவாப் முகம்மது அலி வாலாஜா

1760களில் சேப்பாக்கத்தில் அரண்மனை ஒன்றைக் கட்டி நிரந்தரமாகக் குடி போக இந்த தெரு தனது பொலிவை இழந்திருக்க வேண்டும்.

பாபனாசம் சிவன் சாலையில் பச்சேவாலி பள்ளியும் தர்காவும், அருண்டெல் தெருவில் 1720 களில் கட்டப்பட்ட பள்ளியும் உள்ளன. அது போக சித்திரை குளம் அருகில் உள்ள மசூதித் தெருவில் ஒரு பழமையான பள்ளி முழுதுமாக இடிக்கப்பட்டு புதுப்பள்ளியாக குடியிருப்புகளின் இடையே காட்சியளிக்கின்றது.

இந்த வரலாற்றை விவரித்து பள்ளிகளினுள் சென்று வர கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் ஆகி விட்டது. வந்திருந்த நாற்பது பேரில் நான்கு பேர் மட்டுமே முஸ்லிம்கள். மழை லேசாகத் தூரிக் கொண்டிருந்தாலும், பொருட்படுத்தாது பள்ளிவாசல்கள் உள்ளே சென்றது மரபு நடையில் பங்கேற்ற பலருக்கும் குறிப்பாகப் பெண்களுக்குப் புது அனுபவம். அதுவும் கச்சேரி சாலை ஜூம்மா பள்ளியில் நிர்வாகிகள் தேநீரோடு உபசரித்து, பள்ளிக்கு மேலே சென்று பழைய மினாராக்களையும் பார்வையிட அனுமதித்தது மன நிறைவாக இருந்தது. நன்றி: Vincent D Souza Masood Jamali

# 13. சங்ககாலப் பொன்மொழிகள்

— அருள் மெர்வின்

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற ஒரே ஒரு சங்க இலக்கியப் பொன்மொழி (quote) தவிர வேறு பல பொன்மொழிகள் புத்தகம் போடும் அளவுக்கு சங்க இலக்கியங்களில் இருக்கின்றன. சாக்ரடீஸ் சொன்னார், சேகுவேரா சொன்னார், கடவுள் சொன்னார் என்று பொன்மொழிகளை சமூக வலைத்தளங்களில் பகிர்பவர்கள் அவற்றுடன் மோசிகீரனார் சொன்னார், இடைக்காடனார் சொன்னார் என்று சங்க இலக்கியப் பொன்மொழிகளையும் பகிர்ந்தால் சங்கத்தமிழர்களுக்கும் பெருமை கிட்டும். திருக்குறளுக்கெல்லாம் முற்பட்டவை இவை. தமிழர் திருநாளில் இது வீண் பெருமையல்ல, வீணடிக்கக்கூடாத பெருமை. பின்வரும் சங்க இலக்கியப் பொன்மொழிகள் ஒரு *sample* மட்டுமே. ஒவ்வொன்றையும் வாசித்து ஒன்றிரண்டு நொடிகள் சிந்தியுங்கள். சிந்தித்தால் எப்படியெல்லாம் மூவாயிரம் ஆண்டுகள் முன்பு சிந்தித்திருக்கிறார்கள் என்று சிலாகிக்க முடியும்.

———

*“பலரே மன்ற இவ்வுலகத்துப் பிறரே.”*
*— வெள்ளி வீதியார்*

பலர் இருக்கும் இந்த உலகத்தில் இருப்பவரெல்லாம் பிறரே.

*“இரை கொண்டமையின் விரையுமால் செலவே.”*
*— தாமோதரன்*

இரை கிடைத்ததும் விரைந்து சென்றுவிடுவோம்.

*“நில்லாமையே நிலையிற்று.”*
*— மதுரை கணக்காயன் மகன் நக்கீரன்*

எதுவும் நிலைக்காது என்பதே நிலையானது.

*“இறு முறை என ஒன்று இன்றி மறுமை*
*உலகத்து மன்னுதல் பெறினே”*
*— பரணர்*

இதுதான் இறுதி முறை என்று எதுவும் இல்லாமல் (அடுத்த உலகம் சென்றாலும்) எல்லாம் நிலைபெற்றுத் தொடரும்.

*“நிரம்பா ஆகலின் நீடலோ இன்றே.”*
*– மோசிகீரனார்*

நிரம்பாவிட்டாலும் இன்றைய நாள் நீள்வதில்லை. (இன்று நாம் செய்து முடிக்க நினைத்த காரியங்களை செய்து முடிக்கவில்லை என்பதற்காக இன்றைய நாள் நீளாது.)

*“அவிழ்த்தற்கு அரிது அது முடிந்து அமைந்தன்றே.”*
*– யாரென்று தெரியவில்லை (anonymous)*

ஒரு முடிச்சை எப்படிப் போடுகிறோம் என்பது அதை அவிழ்ப்பது எவ்வளவு கடினம் என்பதைத் தீர்மானிக்கிறது.

*“இறப்பல் என்பது ஈண்டு இளமைக்கு முடிவே.”*
*– தூங்கலோரி*

இனிமேல் நமக்கு வேலையில்லை, கிளம்பிவிடுவோம் (இறப்பல்) என்று நினைத்துவிட்டால் அது இளமைக்கு முடிவு. (அதாவது, இந்த உலகில் உங்களுக்கு வேலை இருக்கும் வரை நீங்கள் இளமையாக இருப்பீர்கள்.)

*“இன்றும் முல்லை முகை நாறும்மே.”*
*– அரிசில் கிழார்*

இன்றும் முகர்ந்தால் முல்லைப்பூ மணக்கும். (ஒரே பூவை என்றும் முகர்ந்து கொண்டிருந்தால் மணந்து கொண்டிருக்காது. வாடிவிடும். ஆனால், இன்று மலர்ந்த முல்லைப் பூ இன்று மணக்கும்.)

*“உயிரோடு எல்லாம் உடன் வாங்கும்மே.”*
*– நொச்சி நியமங்கிழார்*

உயிர் போனால் உடனிருப்பது எல்லாம் போய்விடும்.

*“கல்பொரு சிறுநுரை போல மெல்ல மெல்ல இல்லாகுதுமே.”*
*– கல்பொரு சிறுநுரையார் (!!!)*

பாறையில் நீர் மோதும்போது எழும் சிறிய நுரைகள் போல கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் போகின்றோம்.

*“அவவு கொள் மனத்தேம் ஆகிய நமக்கே.”*
*– குடவாயில் கீரத்தனார்*

ஆசைகொள்வதால் ஆகிய மனதால் ஆகியவர்கள் நாம்.

*“கழிந்த நாள் இவண் வாழும் நாளே.”*
*– பதடி வைகலார்*

கழிந்த நாட்கள் நாம் வாழும் நாட்கள். (நாம் வாழ்ந்த நாட்கள் நாம் வாழும் நாட்களைத் தீர்மானிக்கின்றன.)

*“வேட்டோர் அல்லது பிறர் இன்னாரே.”*
*– மதுரை மருதன் இளநாகனார்*

நாம் அன்பு செய்பவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் நமக்கு அன்பு செய்யாதவர்கள். (அதனால், எல்லோரையும் அன்பு செய்யுங்கள்.)

*“அம் தீம் கிளவி கேட்கம் நாமே.”*
*– இடைக்காடனார்*

நம்மைப் பற்றிய இனிய சொற்களைக் கேட்டு மகிழ்பவர்களே நாம்.

*“அரிது மன்றம்ம அறத்தினும் பொருளே.”*
*— காமக்கணிப் பசலையார்*

அறத்தைவிட அரிதாகப் போய்விட்டது பொருள். (இது ஒரு சர்காஸ்டிக் பொன்மொழி. மக்கள் அறத்தைவிட பொருளை அதிகம் தேடித் திரிகிறார்கள், ஏதோ பொருளுக்குப் பற்றாக்குறை போல.)

*“பிரிந்தனர் பிரியும் நாளும் பல ஆகுபவே”*
*— காவன்முல்லை பூதனார்*

பிரிந்தவர்கள் பிரிய பல நாட்கள் ஆகும். பிரிந்தவற்றைப் பிரிய பல நாட்கள் ஆகும்.

*“உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கே.”*
*— கபிலர்*

ஒன்றை நினைக்காமல் இருக்கும் ஆற்றல் பெற்றவர்கள் வல்லவர்கள். (நினைவுகள்தான் நாம் பழக்கங்களுக்கு அடிமையாகக் காரணம். காலையில் எழுந்தவுடன் செல் போனைப் பற்றி நினைக்காமல் இருக்கும் ஆற்றல் கொண்டவரா நீங்கள்? ஆமென்றால், நீங்கள்தான் இந்த உலகில் வல்லவர்.)

*“சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே. “*
*– பரணர்*

சூழ்ச்சியும் கொஞ்சம் வேண்டும். (சூழ்ச்சி என்றால் strategy என்று எடுத்துக் கொள்ளுங்கள். கொஞ்சம்தான் வேண்டும்.)

*“சில ஆகுக நீ துஞ்சும் நாளே.”*
*– ஔவையார்*

நீ தூங்கும் நாட்கள் சில நாட்களாக இருக்கட்டும்.

*“துயில் கண் மாக்களொடு நெட்டு இரா உடைத்தே.”*
*– கொல்லன் அழிசி*

எவ்வளவு நேரம் மக்கள் தூங்குகிறார்களோ அவ்வளவு நேரம் இருட்டில் இருப்பார்கள்.

*“கவலை மாக்கட்டு இ பேதை ஊரே.”*
*– வடம வண்ணக்கன் பேரிசாத்தன்*

மக்களெல்லாம் கவலையில் இருந்தால் ஊர் முட்டாள் ஊராக இருக்கும். (அதாவது, மக்களை முட்டாள்களாக வைத்திருக்க வேண்டுமென்றால் அவர்களைக் கவலையில் வைத்திருக்க வேண்டும்.)

*"நன்றென உணரார் மாட்டும் சென்றே நிற்கும்*
*பெரும் பேதைமைத்தே."*
*— நக்கீரனார்*

முட்டாள்தனம் என்பது என்னவென்றால் நாம் சொல்வது தமக்கு நல்லது என்று உணராதவர்களிடம் வலிந்து சென்று நிற்பது.

*"மருந்தும் உண்டோ மயலோ இதுவே."*
*— நெடுங்கண்ணன்*

மயக்க மருந்து உண்டு. மயக்கத்துக்கு மருந்து உண்டா?

*"மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே."*
*— மிளைகிழான் நல்வேட்டனார்*

மென்மையான இதயமே செல்வம் என்பது.

*“நீ அளந்து அறிவை நின் புரைமை.”*
*– பரணர்*

நீயே அளந்து அறிந்துகொள் உன் உயர்வை.

*“நன்றே நெஞ்சம் நயந்த நின் துணிவே.”*
*– சேந்தன் கண்ணன்*

நீ உன் மனதால் விரும்பித் துணிந்து எடுக்கும் எல்லா முடிவும் நல்ல முடிவே!

கடைசியாக…

*“பெருந்தேன் கண்படு வரையில் முதுமால்பு*
*அறியாது ஏறிய மடவோன் போல ஏமாந்தன்று*
*இவ்வுலகம்.”*
*– சிறைக்குடி ஆந்தையார்*

பெரிய தேனடை கிடைக்கும் என்று பழைய ஏணி ஒன்றை வைத்துக் கொண்டு அதில் ஏறிய முட்டாள் போல் ஏமாந்து போகிறவர்களால் ஆனது இந்த உலகம்.


பி–கு: மேலே நான் தொகுத்திருக்கும் வரிகள் சங்க இலக்கியங்களில் பழமையானவை என்று

கருதப்படும் குறுந்தொகை, நற்றிணையில் வருபவை. காதல் கவிதைகளில் வருபவை. இதைப் பற்றிய ஒரு *hypothesis* கைவசம் இருக்கிறது. அதை வேறு ஒருமுறை எழுதுகிறேன். இப்போதைக்கு ஆராயாமல் அனுபவியுங்கள்.

– அருள் மெர்வின் (16–01–26)

# 14. கணிதமும் தமிழும்

— முனைவர் ப. பாண்டியராஜா




நான் 1959—'62 —இல் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இளம் அறிவியல் கணிதம் பயின்றேன். (B. Sc Mathematics). அப்போது எனக்கு முதல் பாடமொழி ஆங்கிலம். இரண்டாம் பாடமொழி தமிழ். தமிழ் செய்யுள் புத்தகத்தில் பல சங்க இலக்கியப் பாடல்கள் இருந்தன. அவற்றை ஆசிரியர் வந்து நடத்தும் முன்னர் நானாகப் படித்துப் புரிந்துகொள்ள எண்ணி, கல்லூரி நூலகத்திற்குச் சென்று உரைநூல்களை எடுத்துப்

படிப்பேன். அந்த உரைநூல்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிடப்பட்டவை. அதன் பக்கங்களில் பக்க எண்களைக் குறிப்பிடும் எண்கள் என்னவோ போல் இருந்தன. எனக்குத் தெரிந்த 1, 2, 3, 4, ––– 10 என்ற குறியீடுகளில் இல்லாமல் தமிழ் எழுத்துக்களாக இருந்தன. அவற்றுள் பல தமிழ் எழுத்துக்களாக இல்லாமலும் விநோதமான குறியீடுகளாகவும் இருந்தன.

ஒரு தாளை எடுத்து, அவற்றைக் குறித்துவைத்தேன். அவற்றைப் புரிந்துகொள்ள முயன்றேன். எனக்கு ஓர் அட்டவணையைத் தயாரித்துக்கொண்டேன் – இதைப் போல:

1 2 3 4 5 6 7 8 9 10 100 1000
௧ ௨ ௩ ௪ ௫ ௬ ௭ ௮ ௯ ௰ ௱ ௲

20 இவ்வாறு இருந்தது: ௨௰
369 இவ்வாறு இருந்தது: ௩௲௬௰௯

இவற்றைத் தமிழ் எழுத்துக்கள் என்று எப்படி எடுத்துக்கொள்வது?

௧ ௨ ௫ ௭ ௮ ௬ ஆகியவை முழுமையான தமிழ் எழுத்துக்கள்தான்.

ஆனால் ௩ ௪ ௯ ௰ ௱ ஆகியவை?

அதிலும் *3* – ஐக் குறிக்கும் ௩. அதில் ஏன் கடைசியில் நெட்டுக்கோடு இல்லை? பின்னர், ஒரு கல்லூரியில் பேசும்போது குறிப்பிட்டேன். *It is our* ங *without the compound wall !!*

*4* – ஐக் குறிக்கும் ௪. அதில் அந்த நெட்டுக்கோடு தேவையில்லாமல் நீட்டிக்கொண்டிருக்கிறது.

நான் ஏற்கனவே என் நண்பர்களிடம் பெருமையாகச் சொல்வதுண்டு.

தமிழ் எண்களைச் சொல்லிப்பாருங்கள்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, நூறு.

என்ன தோன்றுகிறது உங்களுக்கு என்பேன். அவர்கள் விழிப்பார்கள்.

நான் சொல்வேன்: அனைத்துமே ‘உ’ — வில் முடிகின்றன. (ஆயிரம் — தமிழ்ச்சொல் அல்ல — சகஸ்ரம் என்ற வடசொல்லின் திரிபு)

அதுமட்டுமல்ல, ஏழு என்பதைத் தவிர அனைத்துமே குற்றியலுகரங்கள் என்பேன்.

எண்களின் பெயர்களிலேயே அத்துணை ஒருமைப்பாடு இருக்கும்போது, அவற்றின் குறியீடுகளில் இத்துணை குழப்பம் ஏன்?

எனவே, ’இவை தமிழ் எழுத்துகள் இல்லை. தமிழ் எழுத்துகள் போல் தோன்றுவனவும் தமிழ் எழுத்துகள் இல்லை’ என்ற முடிவுக்கு வந்தேன்.

ஆகையால், அவற்றின் வரலாற்றை ஆயும் முனைப்பும் உண்டானது.

எனவே, *History of Mathematics* என்ற புத்தகத்தைத் தேடி, அதில் *History of Numerals* என்ற பகுதியைப் படித்தேன். அதில் மிகவும் வியப்பான செய்திகள் இருந்தன.

அதுவரை *zero* என்பதைக் கண்டுபிடித்ததே நாம்தான் என்று பெருமையுடன் சொல்வேன்.

ஆனால், அதுமட்டுமல்ல, இன்று உலகம் முழுக்கப் பயன்படுத்தப்படும் எண்களையும் எண்முறையையும் முதலில் கண்டுபிடித்து உலகுக்குத் தந்தவர்கள் இந்தியர்கள் என்ற உண்மை தெரியவந்தது.

அதில் தமிழர்களுக்கு ஓர் சிறப்பிடம் உண்டு என்பதுவும் தெரியவந்தது. அதைப் பின்னர் பார்ப்போம்.

இப்போது, ஒரு சிறுவனை அழைத்து 'இருநூற்று இருபத்து இரண்டு' என்று எழுது என்று சொன்னால், அவன், இதுகூடத் தெரியலயா என்று சொல்லி. 222 என்று எழுதிக்காண்பிப்பான். "ஏண்டா, நான் கேட்டது" இருநூற்று இருபத்து இரண்டு", நீ மூன்று முறை '2' – ஐ எழுதிக்காண்பிக்கிறாய் என்று கேட்டால், அவன் தலையில் அடித்துக்கொண்டு, அந்த எண்களைத் தொட்டுக்காண்பித்து, "இது ஒன்று, இது பத்து, இது நூறு" என்பானா இல்லையா?

ஆமாம், நாம் எழுதும் ஒவ்வொரு எண்ணுக்கும் அதற்கென்று ஒரு மதிப்பு இல்லை. அவை வெறும் குறியீடுகள்தான். இந்த எண்குறியீடுகள்

*Numerals* எனப்படும். இவற்றுக்கு மதிப்பு கிடையாது. அவை மதிப்பு பெறும்போது, எண்கள் — *Numbers* — எனப்படுகின்றன.

ஒன்றாம் இடம், பத்தாம் இடம், நூறாம் இடம் என்று நம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் நம் தலையில் ஆணியடித்துச் சொல்லித்தந்தவை.

இவ்வாறு எழுதும் முறைக்கு இடமதிப்புமுறை என்று பெயர். *(Positional value system)*

இதென்ன, சின்னப்பிள்ளைத்தனமாயிருக்கு என்று சிலர் முணுமுணுக்கலாம்.

ஆனால், இந்த முறையைத் தெரிந்துகொள்ள உலகத்திற்கு எத்தனை ஆயிரம் ஆண்டு காலம் பிடித்தது தெரியுமா?

உலகத்திற்கு அறிவியலை அறிமுகப்படுத்திய பெருமை கிரேக்கர்களைச் சேரும். அரிஸ்டாட்டில், ஆர்க்கிமிடீஸ், பித்தாகோரஸ், யூக்ளிட் போன்ற பெரும் அறிவியலாளர்களை உலகுக்குத் தந்தது கிரேக்கம். ஆனால் அந்த அறிவியல் மேதைகளுக்கும் இந்த இடமதிப்பு முறை

தெரிந்திருக்கவில்லை. அவர்கள், எண்களைக் குறிக்க, தம் எழுத்துக்களையே பயன்படுத்தினர்.

α, β, γ, δ … (*Alpha, Beta, Gamma, Delta…*) என்பவையே 1, 2, 3, 4 ஆகிய எண்களைக் குறிக்கப்பயன்பட்டன. Ι, κ, λ, μ (*iota, kappa, lambda, mu…*) என்பவையே 10, 20, 30, 40 ஆகிய எண்களைக் குறிக்கப்பயன்பட்டன. Ρ, σ, τ, υ .. என்பவையே 100, 200, 300, 400 ஆகிய எண்களைக் குறிக்கப் பயன்பட்டன.

இதன் முறையில் σκβ என்பதுதான் நமது 222. இந்த எழுத்துக்களை மாற்றிப்போட்டால் அர்த்தமே இல்லை!!

அடுத்து, உலகத்தையே தம் குடைக்கீழ் கொண்டுவந்து ஆளத் துடித்த ரோமானியர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?

அவர்கள் எண்முறை ஓரளவு தெரிந்ததுதான்.

*I II III IV V VI VII VIII IX X L C D M* = 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 50, 100, 500, 1000

அவர்களின் முக்கிய குறியீடுகள்:

*1, 10, 100 = I X C*
*5, 50, 500 = V L D*

4 என்பது ஐந்திற்கும் ஒன்று குறைவு: *IV*
40 என்பது ஐம்பதுக்கும் பத்து குறைவு: *XL*
400 என்பது ஐநூறுக்கும் நூறு குறைவு: *CD*

444—ஐ அவர்கள் எப்படி எழுதியிருப்பார்கள் என்று எண்ணிப்பாருங்கள்!!

எண்களை எழுதுவதற்கே இத்தனை பாடு என்றால் அந்த எண்களை எழுதிக் கூட்டவோ, கழிக்கவோ அவர்கள் பெரும் சிரமப்பட்டனர் எனலாம்.

243 — ஐயும், 415 — ஐயும் எவ்வாறு கூட்டுவது? இன்று, இவற்றை ஒன்றன்கீழ் எழுதி, எளிதாக நாம் கூட்டிவிடுகிறோம்.

5—ம், 3—ம் 8. 1—ம் 4—ம் 5. 4—ம் 2—ம் 6. விடை 658.

ஆனால் ரோமானியர்கள் இதனை, *CCXLIII* + *CDXV* என்று எழுதுவார்கள். கிரேக்கர்களின் முறை இன்னும் கடினமானது.

எனவே, அவர்கள் எண்களைக் கூட்ட *ABACUS* என்ற ஒரு கருவியைப் பயன்படுத்தினார்கள். இந்த *ABACUS* இல்லாமல் அவர்களால் வணிகம்செய்யவே முடியாது.

ஆனால், அவர்களுடன் வணிகம்செய்ய வந்த அரேபியர்கள், தாங்கள் கொண்டுவந்த காகிதத்தில் (*PAPYRUS*) என்னமோ எழுதி, எளிதாக இந்த எண்களை அவர்கள் கூட்டிச் சொன்னார்கள்.

அவர்கள் பயன்படுத்தியது இன்று நாம் பயன்படுத்தும் எழுத்துமுறை.

இதைக் கண்ட மேலைநாட்டினர் அதைப் பற்றி அறிந்து, அந்த முறையைக் கற்றுக்கொண்டு தாமும் அதனைப் பயன்படுத்தினர். அதற்கு அவர்கள் கொடுத்த பெயர் அராபிய எண்கள் (*Arabic numbers*).

ஆனால், அந்த அராபியர்களும் இதனைக் கற்றுக்கொண்டது இந்தியர்களிடமிருந்துதான்.

எனவேதான், இன்று அந்த முறை HINDU ARABIC NUMBERS எனப்படுகிறது.

இதில் HINDU எனப்படுவது நம் நாட்டைக் குறிப்பதாகும். மிகவும் பிற்காலத்திலேதான் அது ஒரு மதத்தைக் குறிக்கப்பட்டது.

எனவே, இன்று உலகம் முழுவதும் பயன்படுத்தும் எண்களும், எண்முறையும் இந்தியர்களின் பங்களிப்பாகும்.

இன்று, நாம் பயன்படுத்தும் எண்முறையில் மூன்று அம்சங்கள் உண்டு.

1. இந்த எண்முறையில் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 0 என்ற பத்து குறியீடுகளைக் கொண்டு எந்த எண்ணையும் எழுதமுடியும்.

2. இது பத்தை அடியாகக் கொண்டது (10 based). அதாவது ஒன்று, இரண்டு, மூன்று, .... பத்து வரை புதுப்புதுப் பெயர்கள். அதற்கு மேல், பத்தும் ஒன்றும், பத்தும் இரண்டும், ... இரண்டு பத்து, மூன்று பத்து, எனப் பெயர்கள் பத்தின் மடங்காகவே இருக்கும். பத்துப் பத்து மட்டும் நூறு எனப்படும்.

உலகின் பல எண்முறைகள் பத்து என்ற எண்ணையே அடியாகக் கொண்டவை.

ஆனால், பண்டை பாபிலோனியர்கள் 60—ஐ அடியாகக் கொண்டவர்கள். அதனால்தான் 60 விநாடிகள் = 1 நிமிடம், 60 நிமிடங்கள் = 1 மணி.

தென் அமெரிக்காவின் மாயர்கள் 20—ஐ அடியாகக் கொண்டு, தம் எண்முறையை வகுத்தனர்.

ஆனால், பெரும்பாலானவை 10—ஐ அடியாகக் கொண்ட முறைகள்தாம். நம் முறையும் அதுதான்.

3. இதுதான் முக்கியமானது. இந்த எண்முறை இடமதிப்பு என்ற கொள்கையை உடையது. (Positional notation).

நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, எண்களை வரிசையாக எழுதி, அவற்றுக்கு வலமிருந்து இடமாக, ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் என்ற மதிப்பைக் கொடுக்கிறோம். அதாவது, 1234 என்பது நாம் ஒன்று—இரண்டு—மூன்று—நான்கு என்று படிப்பதில்லை. இதை ஆயிரத்து இருநூற்று

முப்பத்து நான்கு என்றுதான் படிக்கிறோம். இங்குள்ள 1–க்கு ஆயிரம் என்ற மதிப்பு. 2–க்கு இருநூறு என்ற மதிப்பு உண்டு.

இதுதான் நாம் உலகுக்கு வழங்கிய புதிய முறை. இது இந்திய முறை.

இப்போது தமிழுக்கு வருகிறேன். மீண்டும் இங்கு அதைக் குறிப்படுகிறேன்.

க உ ங ச ரு சூ எ அ கூ ய ௱ கூ = *1 2 3 4 5 6 7 8 9 10 100 1000*

யக யஉ யங யச யரு = *11 12 13 14 15*

உயக உயஉ உயங உயச உயரு = *21 22 23 24 25*

ஙயக ஙயஉ ஙயங ஙயச ஙயரு = *31 32 33 34 35.*

நன்றாகப் பாருங்கள். இது இடமதிப்பு முறை அல்ல. நாம் எப்படி உச்சரிக்கிறோமோ அப்படியே எழுதுகிறோம்.

இரு (உ) பத்து (ய) மூன்று (ங). = உயங.

இதில் ஒரு வசதி உண்டு.

*103* = ௱௩
*1003* = ௲௩

எனவேதான் தமிழ்முறை இடமதிப்பு முறை அல்ல என்றாகிறது.

அப்படியானால், இந்த இடமதிப்பு எழுதுமுறை இந்தியாவில் எங்கு தோன்றியது. வடநாட்டில்தான்.

ஆனால், இந்திய எண்கள் அனைத்திற்குமே (தமிழ் உட்பட) மூலமாக இருப்பது பிராமி எண்கள் தான். இந்தப் பிராமி எண்கள்தான் இந்தியாவின் பல்வேறு மொழிகளிலுள்ள பல்வேறு எண்களின் உருவங்களின் மூலம் என்பது ஆய்வறிஞர் கல்வெட்டுகளின் அடிப்படையில் கண்டுபிடித்த உண்மை.

ஆனால், இந்தப் பிராமி எண் முறை இடமதிப்பு முறையில் அமைந்தது அல்ல. கிரேக்கர்கள் போல் பத்து, இருபது, முப்பது, நாற்பது போன்ற எண்களுக்கு வெவ்வேறு முழு எண்ணுருக்கள் பயன்படுத்தப்பட்டன.

ஒரு காலகட்டத்தில், இந்த முறை மாறி, திடீரென்று இடமதிப்பு முறையில் வடநாட்டிலும் எண்கள் எழுதப்படுகின்றன.

இதை மிகச் சுலபமாக விளக்கவிடலாம்.

தமிழில் உ௰க உ௰உ உ௰ங உ௰ச உ௰ரு = 21 22 23 24 25

என்று எழுதும்போது ஒன்றைக் கவனித்தீர்களா?

இதில் பத்து என்ற எண்ணின் குறியீடு (௰) திரும்பத் திரும்ப வருகிறது. இதைத் தவிர்த்துவிட்டு உக உஉ உங உச உரு என்று எழுதி, அந்த உ இருபது என்ற மதிப்பைப் பெறுகிறது என்று கற்பித்துவிட்டால், தமிழ் எழுத்துமுறை இன்றைய முறை ஆகிறது.

இதில் சில சிக்கல்கள் இருக்கின்றன.

1. ௰க ௰உ ௰ங ௰ச ௰ரு = 11 12 13 14 15

என்ற எண்களை எவ்வாறு எழுதுவது. அப்போது பத்து (௰) தேவைப்படுகிறது.

2. ௨௱௧ ௨௱௨ ௨௱௩ ௨௱௪ ௨௱௫ = 201 202 203 204 205

ஆகியவற்றில், நூறு என்ற எண்ணின் குறியீடான ௱ என்பதை நீக்கிவிட்டால், அது ௨௧ ௨௨ ௨௩ ௨௪ ௨௫ என்று ஆகி 21 22 23 24 25 என்று பொருள்படுமே! இதைத் தீர்ப்பது எப்படி?

ஒரு தீர்வு உண்டு.

காட்டாக, ௨௱௧ என்பதை ௨. ௧ என்று எழுதி நடுவில் ஒரு புள்ளி வைத்தால், அந்தப் பத்தாவது இடம் காலி – ஒன்றுமில்லை – என்ற கற்பிதத்தை ஏற்படுத்திவிடலாம். இது யாரோ ஒரு இந்தியனுக்கு முதலில் தோன்றியிருக்கிறது.

அந்தப் புள்ளிதான் நன்றாகக் கண்ணுக்குத் தெரியவேண்டும் என்பதற்காகக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாக ஆகி 0 என்ற வட்ட வடிவத்தைப் பெற்றிருக்கிறது எனலாம்.

இதற்கு அவன் வைத்த பெயர் வெறுமை – சூனியம் – *SUNYA*.

இதைக் கற்றுக்கொண்ட அராபியர்கள் இந்த *SUNYA* என்பதைத் தங்கள் மொழியில் *cifr* என்றார்கள். அதற்கு *nothing* என்று பொருள்.

இதுவே இன்றய *ZERO, CYPHER* ஆகிய சொற்களின் மூலச்சொல்.

இந்த முறைப்படி, தமிழர்களின் பத்துக்குரிய எழுத்து ௰ – என்பதுவே க0 என்றாகிறது.

ஆக, இன்று நாம் இந்திய முறை என்று பெருமையுடன் கூறிக்கொள்ளும் அனைத்துலக எழுத்துமுறைக்கு மிக மிக அண்மை வரைக்கும் நம் தமிழ் முறை வளர்ந்திருக்கிறது.

இதை *HUMBOLT* என்ற வரலாற்றறிஞர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

*The Tamul (Tamil) numerals have played a very important role in the evolution of the present position value number system in India.*

ப. பாண்டியராஜா
*18–01–2026*

# 15. எல்லி: சொற்களின் சொல்

— அருள் மெர்வின்

“சூரியன் மறைந்தது. சூரியனைப் பிரிந்து இரவு வாடியது.”

ஏறக்குறைய இந்த அர்த்தத்தில் நற்றிணையில் இரண்டு வரிகள் உள்ளன. இதில் பொருட்பிழை உள்ளது. பொருட்பிழை என்றதும் அது யார் பெற்ற பிள்ளையோ என்று ஓடிவிட வேண்டாம். நாம் எழுதுவதில் சொற்பிழை, பொருட்பிழை என்று இரண்டு வகைப் பிழைகள் வரலாம். பிழையை பிளை, பிள்ளை என்றெல்லாம் எழுதினால் அது சொற்பிழை. பெரும்பாலும் ஆபத்தில்லாதவை. சொல்ல வரும் விஷயத்தில், அதாவது, பொருளில் தவறு இருந்தால் ஆபத்து. ஸ்பெல்லிங் மிஸ்டேக்குடன் ப்ரேக்கிங் நியூஸ் போட்டால் அது சொற்பிழை. அந்த நியூஸே தவறாக இருந்தால் அது பொருட்பிழை. பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உள்ளதாகப் பொருள் படும்படி எழுதப்பட்ட ஒரு சங்ககாலப் பாடலை வைத்துக் கொண்டு பின்னாட்களில் நடந்த விவாதம் பொருட்பிழை பற்றியது.

மேலேயுள்ள சூரியன் பற்றிய வரிகளிலுள்ள பொருட்பிழையைக் கண்டுபிடித்தீர்களா? “சூரியனைப் பிரிந்து இரவு வாடியது” – யோசித்துப் பாருங்கள். சூரியன் இல்லாவிட்டால்தான் அது இரவு. சூரியன் இருந்தால் இரவே இருக்காது. சூரியனை ஆன் செய்தால் பகல். ஆஃப் செய்தால் இரவு. சூரியனை இரவு பிரிய முடியாது. பகல்தான் சூரியனைப் பிரிய முடியும். இந்த பொருட்பிழையைச் சரி செய்வதிலும் சிக்கல் உள்ளது. “சூரியனைப் பிரிந்து பகல் வாடியது” என்றும் எழுத முடியாது. சூரியனைப் பிரிந்தபின் அங்கே வாட பகலே இருக்காது. அது இரவாகிவிடும். உண்மையில் பகல், இரவு என்பதே மனிதப்பிழை. இதை விளக்க ஒரு கதை இதை எழுதிக் கொண்டிருக்கும் போதே கண்ணில் பட்டது.

யுவன் சந்திரசேகர் என்பவர் எழுதிய சிறுகதைகளைப் பற்றி ஷோபனா நாராயணன் என்பவர் எழுதியதை பரிசல் கிருஷ்ணா முகநூலில் பகிர்ந்ததால் கண்ணில் பட்டது. இவர் இப்படியெல்லாம் பகிராவிட்டால் தமிழில் யார் என்ன எழுதுகிறார்கள் என்பது என் போன்றோருக்குத் தெரிய வாய்ப்பில்லை.

//முல்லையாத்திலே பசுமாட்டுப் பொணம் மிதந்து வருது, வயிறு பெரிசா உப்பியிருக்கு. அம்மா மீன், குஞ்சு மீன்கிட்டச் சொல்லறது, வா, உயரம் தாண்டக் கத்துத் தரேன்.

குஞ்சு மீன் பார்த்துக்கொண்டேயிருக்க, அம்மா மீன் மாட்டின் வயித்துக்கு இந்தப்புறத்திலேயிருந்து முதுகுக்கு மறுபுறம் பாய்கிறது.

காலையில் பாய்கிறது. அந்தப்பக்கம் போனதும் ராத்திரி ஆகிவிடுகிறது.

மறுபடி மறுபடி தாவுகிறது, விடிந்திருக்கிறது.

நாம் வாழ்வது இரவா, பகலா என்பது சூரியன் இருக்கா இல்லையா என்பதைப் பொருத்தது. நற்றிணை வரிகளுக்குள் செல்லும் முன் ஒரு சில சொற்களை மூளைக்குள் லபக்கென விழுங்கிவிடுவோம்.

'புலம்பு' (noun) என்ற சொல் சங்க இலக்கியங்களில் 'தனிமை' என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கூட்டமாக

கும்மாளம் போட முடியும். கோஷம் போட முடியும். போட்டுவிட்டுத் தனியாகதான் புலம்ப முடியும். இந்த தனிமையின் பெயர் ‘புலம்பு’.

‘ஞான்று’ என்றால் ‘பொழுது’ என்று முந்தைய பதிவு ஒன்றில் எழுதியிருந்ததாக ஞாபகம். எஞ்ஞான்றும் = எப்பொழுதும் என்பார் வள்ளுவர். பொழுது சாய்தல் என்றால் சூரியன் மேற்கு திசையில் போய்ச் சாய்தல். மனிதர்கள் பூமியில் தினமும் செய்யும் அட்டூழியங்களைப் பார்த்து சூரியன் தினமும் மேற்கே போய் தூக்கு போட்டுத் தொங்கிவிடுகிறது. ‘ஞான்று’ என்றால் தொங்குதல் என்றும் அர்த்தம் உள்ளது. சூரியன் தொங்கியதும் மனிதர்கள் சப்பாத்தி, பரோட்டா சாப்பிட்டுத் தூங்கிவிடுவார்கள். சிலர் சரக்கடித்துக் கவிழ்ந்துவிடுவார்கள். சிலர் பகலில் செய்ய முடியாததையெல்லாம் செய்வார்கள். ஆனால், இரவு நேரத்தில் கொடிகளைக் கவனித்திருக்கிறீர்களா? தாவர வகையைச் சேர்ந்த கொடிகள். தாவற வகை என்று சொற்பிழை போட்டால் கட்சிக்கொடிகளாகிவிடும். சூரியன் இல்லாமல் கொடிகளின் இலைகள், பூக்கள் எல்லாம் வாடித் தொங்கிக் கொண்டிருக்கும்.

‘எல்லி’ என்றால் ‘இரவு’ என்று இப்போதைக்கு வைத்துக் கொள்வோம். இந்த பதிவின் கரு இந்த சொல்தான். இப்போது நற்றிணை வரிகளுக்கு வருவோம்.

*ஞாயிறு ஞான்று கதிர் மழுங்கின்றே*
*எல்லியும் பூ வீ கொடியின் புலம்பு*
*அடைந்தன்றே*

ஞான்று, எல்லி, பூ, கொடி, புலம்பு போன்ற சொற்களையெல்லாம் உங்கள் மூளை இந்நேரம் விழுங்கியிருந்தால் இந்த நற்றிணை வரிகள் ஓரளவு புரிந்திருக்கும். முதல் வரி சூரியன் (ஞாயிறு) மறைந்து விட்டதே என்கிறது. இரண்டாம் வரி, “இரவும் (எல்லியும்) பூ வாடிய கொடியின் தனிமையை அடைந்துவிட்டதே”, என்கிறது. சூரியனைப் பிரிந்து இரவு தனிமையில் வாடியதாக அர்த்தம். இதுதான் நான் மேலே மாய்ந்து மாய்ந்து விளக்கிய பொருட்பிழை.

பொருட்பிழையுடன் செய்யுள் எழுத கீரங்கண்ணனார் (நற்றிணை—218 பாடலை எழுதியவர்) ஒன்றும் கடவுள் அல்ல. இதில் ஏதோ உட்குத்து இருக்கிறது. ‘எல்லி’ என்ற சொல்லின்

ஆச்சரியத்தைப் புரிந்து கொண்டால் பொருட்பிழை அகன்றுவிடும்.

'எல்லி' என்ற சொல்லை பகல் நேரத்துக்கும் சங்க இலக்கியங்களில் உபயோகித்திருக்கிறார்கள். இரவு, பகல், மாலை என்று பல்வேறு அர்த்தங்கள் வரும்படி ஜோக்கர் கார்ட் போல சங்க இலக்கியங்களில் உபயோகித்திருக்கிறார்கள். "எல்லியும் இரவும் என்னாது", என்று வேறொரு நற்றிணைப் பாடலில் (163) வருகிறது. அதாவது, பகலும் (எல்லியும்) இரவும் என்னாது. இதைவிட ஆச்சரியம் என்னவென்றால் 'எல்லி' என்ற சொல் பகல், இரவு என்ற இரண்டு அர்த்தத்திலும் ஒரே வரியில் பதிற்றுப்பத்து (19) பாடல் ஒன்றில் வருகிறது. புரிந்தால் அசந்து போவீர்கள்.

"எல்லும் நனி இருந்து எல்லிப் பெற்ற அரிது பெறு பாயல்" – 'பாயல்' என்றால் பாயை விரித்து அதில் பாய்தல். அதாவது, தூக்கம். பகலெல்லாம் (எல்லும்) ஜாலியாக இருந்து (நனி இருந்து) இரவில் பெற்ற (எல்லிப் பெற்ற) அரிதாகக் கிட்டிய தூக்கம் (அரிது பெறு பாயல்). கலித்தொகையிலும் (144) எல்லியை பகல், இரவு

என்று இரண்டு அர்த்தத்திலும் ஒரே பாடலில் உபயோகித்திருக்கிறார்கள்.

‘எல்லி’ என்ற சொல் பகல், இரவு என்பதைக் கடந்த சொல். சூரியன் இருந்தால் அது பகல். சூரியன் இல்லாவிட்டால் அது இரவு. எல்லையற்ற சொல் எல்லி! “சூரியனைப் பிரிந்து இரவு வாடியது” என்றாலும் பொருட்பிழை. “சூரியனைப் பிரிந்து பகல் வாடியது” என்றாலும் பொருட்பிழை. பொருட்பிழை இல்லாமல் எழுத வேண்டுமென்றால் இந்த வரியை “சூரியனைப் பிரிந்து ‘எல்லி’ வாடியது” என்றுதான் எழுத முடியும். சொற்களின் சொல் எல்லி. மொழிகளின் மொழி தமிழ்.

நம்மை வியக்க வைக்கும் ‘எல்லி’ என்ற தமிழ்ச்சொல் ஒருகாலத்தில் புழக்கத்தில் இருந்திருக்கிறது என்று மட்டும்தான் இன்று பெருமை கொள்ள முடியும்.

— அருள் மெர்வின் (25—01—26)

# 16. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்ச்சிகள்

— ஜனவரி 1, 2026 — ஜனவரி 31, 2026 நிகழ்வுகள். தொகுப்பாளர்: மரிய ஜெரின் —

## க. அயலகத் தமிழர் தினம்




"தமிழால் இணைவோம்; தமிழால் உயர்வோம்!" என்ற உயரிய நோக்கத்துடன் 2026 ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில், தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் "உலக அயலகத் தமிழர் தினம்" (World Tamil Diaspora Day 2026) மிக பிரம்மாண்டமாக

சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னையில் கொண்டாடப்பட்டது.







இரண்டு நாள், ஆறு அமர்வுகள் மற்றும் இணை அரங்க அமர்வுகளுடன் கூடிய இவ்விழாவினை தொடங்கி வைத்து திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பேருரை ஆற்றினார். இரண்டாம் நாள் அயலகத்

தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழாவினை சிறப்பித்தார்.




சிறப்பாக நடைப்பெற்ற இவ்விழாவில், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு இரண்டு அமர்வுகளில் பங்கேற்றது. தமிழர்கள் உலக அரங்கில் ஆற்றிவரும் பங்கை எடுத்துரைக்கும் விதமாக இணை அரங்க அமர்வுகள் அமையப்பெற்றன. தமிழ் உறவுகளைச் சந்தித்து மகிழ்வதற்கு இது ஒரு பொன்னான வாய்ப்பாக பயன்படுத்தி உலகின் 70 நாடுகளில் இருந்து சுமார் 3000—க்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்துகொண்டார்கள்.




முதல் நாளில் இரண்டாம் அமர்வு "தொன்மையும் நாகரிகமும், தமிழர் பண்பாட்டு அடையாளம்" எனும் தலைப்பில் திருமிகு. ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப., (ஓய்வு) தலைவர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அவர்களது தலைமை மற்றும் வழிநடத்துதலில் அரங்கேறியது. இதில் முனைவர் ந. கண்ணன், துணைத் தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை, அவர்கள் கொரியா–தமிழ் இடையேயான மொழித் தொடர்பு குறித்து உரையாற்றினார்.




மூன்றாவது அமர்வு "எங்கு தமிழர் உள்ளார்களோ, அங்கே தமிழ் வாழ்கிறது" எனும் தலைப்பில் திருமிகு. சா.மு.நாசர், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலும், கலந்துரையாடலானது முனைவர் க. சுபாஷிணி, தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை, அவர்களது வழிநடத்துதலில் அரங்கேறியது. இவ்வமர்வில் புலம் பெயர்ந்த தமிழர்களின் வலி, வேதனை, உயர்வு, வணிகம், கலை, இலக்கியம் மற்றும் தற்போதைய நிலை குறித்து பேசப்பட்டது.




அயலகத் தமிழர் நாள் விழாவின் இரண்டாம் நாளில் அயலகத் தமிழ் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். கடந்தாண்டு செப்டம்பர் மாதம் முதல் தமிழ் மரபு அறக்கட்டளை இந்தோனேசியாவின் ஆசிய தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து தொடங்கிய தமிழ்ப் பள்ளி சார்ந்த முன்னெடுப்பு இந்த பணி நியமன ஆணை மூலம் வெற்றிகரமாக நான்கு ஆசிரியர்கள் இந்தோனேசியா செல்வதற்கு வழி வகுத்து நல்ல முறையில் வெற்றி கண்டிருக்கின்றது.

## உ. புத்தகக் கண்காட்சி



தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் (BAPASI) நடத்திய 49வது சென்னைப் புத்தகக் கண்காட்சியை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜனவரி 8, 2026 அன்று நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் முறைப்படி தொடங்கி வைத்தார். சுமார் 1000 அரங்குகளுடன் ஜனவரி 21 வரை நடைபெற்ற இக்கண்காட்சி புத்தக பிரியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று சிறப்பாக நிறைவடைந்தது.




தமிழ் மரபு அறக்கட்டளை செயற்குழுவினர் தலைவர் முனைவர் க. சுபாஷிணி அவர்களுடன் ஜனவரி 15, 2026 தைப் பொங்கல் அன்று புத்தகக் கண்காட்சியை பார்வையிட்டு நூல்களை விரும்பி வாங்கினர். தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பக நூல்கள் விற்பனைக்காக எமரால்ட் பதிப்பக அரங்கு (F–53), மிளிர் பதிப்பக அரங்கு (316) மற்றும் பரிதி பதிப்பக அரங்கில் (283–284) காட்சிப்படுத்தப்பட்டது.


மக்கள் வரலாறு
தமிழ் வலசை
Shot on OnePlus


கட்டுரை (திறனாய்வு)
கட்டுரைகள்
வேலூர்ப் புரட்சி
1806
Galaxy A35 5G


Yali Publication
Galaxy A35 5G

49—வது சென்னை புத்தகக் கண்காட்சியை தொடர்ந்து சென்னை கலைவாணர் அரங்கில் நான்காவது பன்னாட்டு புத்தகக் காட்சி ஜனவரி 16 முதல் 18 வரை நடைபெற்றது. இது ஒரு தனித்துவமான B2B வர்த்தகத் தளம். இதன்மூலம் பதிப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் இலக்கிய முகவர்கள் நேரடியாகக் கலந்துரையாடி காப்புரிமை மற்றும் இலக்கியப் பரிமாற்றங்களை மேற்கொள்ள ஒரு சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தது. இங்கும் தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பக நூல்கள் விற்பனைக்கான அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டது.

## ந. வாமனத் தீவு: நூல் அறிமுக விழா



பன்னாட்டு தமிழ்க் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் புதுமை இலக்கியத் தென்றல் ஏற்பாட்டில் தமிழர் தலைவர், ஆசிரியர் கி வீரமணி அவர்கள் தலைமையில் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழக மேனாள் தலைவர் திரு நா. ஆண்டியப்பன் எழுதிய "வாமனத் தீவு" – சிங்கப்பூர் வரலாற்று நூல் அறிமுக விழா நேற்று (19–01–2026) மாலை அன்னை மணியம்மையார் அரங்கம், பெரியார் திடலில் சிறப்பாக நடைபெற்று நூல் வெளியிடப்பட்டது.




வாமனத் தீவு நூலைப் பற்றிய அறிமுகயுரையை தமிழ் மரபு அறக்கட்டளை தலைவர் முனைவர் க. சுபாஷிணி அவர்கள் வழங்கினார். இந்நூலின் சிறப்பினை எடுத்துக்கூறி பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தலைவர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை; கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோ, ஆசிரியர், மக்கள் மனம் இதழ் & நிறுவனர், கவிமாலை, சிங்கப்பூர் மற்றும் திரு மு. சிதம்பரபாரதி, செயலர், தமிழ் இயக்கம் ஆகியோர் தங்கள் வாழ்த்துரைகளை வழங்கி விழாவினை சிறப்பித்தனர். தொடர்ந்து நூல் வெளியீட்டின் போது முதல் நூலினை திரு சேது சொக்கலிங்கம், மேனாள் தலைவர், *BAPASI* & உரிமையாளர், கவிதா பதிப்பகம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.




வாமனத் தீவு நூலின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறுகையில் திராவிட இயக்கத் தலைவர் ஆசிரியர் கி வீரமணி அவர்கள் சிங்கப்பூர் சென்று பெற்றுக்கொண்டு வருவதை விட கற்றுக்கொண்டு வருவதற்கு நிறைய படிப்பினைகள் இருக்கிறது. அவை எவை என்பதை இந்நூல் கோடிட்டு காட்டுகிறது என்று நூலின் பெருமையை பறைசாற்றினார்.



# ச. இலக்குவனார் தமிழ்மணி விருது




தமிழ்க்காப்புக் கழகம், தேனி வையைத் தமிழ்ச்சங்கம் மற்றும் இலக்குவனார் இலக்கிய இணையம் ஆகிய அமைப்புகள் இணைந்து தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் செயலாளர் முனைவர் தேமொழி அவர்களுக்கு தை 11, 2057 அன்று சென்னை எழும்பூரில் நடந்த பாராட்டு விழாவில் "இலக்குவனார் தமிழ்மணி விருது" வழங்கிப் பெருமகிழ்வு கொண்டார்கள்.




முனைவர் தேமொழி அவர்கள் தமிழ்நூல்கள் தொடர்பில் இதுவரை 23 நூல்கள் எழுதியுள்ளார். மேலும் பல்வேறு தமிழ் இதழ்களில் ஆசிரியர் குழுவில் பொறுப்பேற்று இதழ்கள் வழியாகவும் சில அமைப்புகளில் பொறுப்பு வகித்து அவற்றின் வழியாகவும் தமிழ்த்தொண்டு ஆற்றி வரும் இணையச்சுடர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரு. தனிநாயக அடிகளின் தமிழ்ப்பணி — பன்னாட்டுக்கருத்தரங்கு




அனுகிரகா சமூக அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை; தமிழ் மரபு அறக்கட்டளை; தமிழ்மேடை பாரிசு, கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியின் தமிழ்த்துறை, சென்னை — பன்னாட்டுத் தமிழ்க்கல்வியாளர் பேரவை ஆகியோர் ஒருங்கிணைந்து 30.01.2026 அன்று

கல்லூரி அரங்கம், தமிழ்த்துறை, அனுகிரகா சமூக அறிவியல் கல்லூரி, திண்டுக்கலில் தனிநாயகம் அடிகளின் தமிழ்ப்பணிகள் குறித்த பன்னாட்டுக்கருத்தரங்கை அரங்கேற்றினார்கள். இக்கருத்தரங்கில் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் க. சுபாஷிணி அவர்கள் தனது உரையை இணையம் வழியாக நிகழ்த்தினார்கள்.

## கூ. அம்பேத்கரியம் 50 நூல்கள் வெளியீட்டு விழா



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் (விசிக) ஜெய் பீம் ஃபவுண்டேஷன் சார்பில் விசிக துணைப் பொதுச்செயலாளர் முனைவர் கௌதம சன்னா அவர்களின் தொகுப்பில் உருவாக்கப்பட்ட புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பேச்சும் எழுத்தும் 50 நூல்களாக எழுச்சித்தலைவர் முனைவர் தொல். திருமாவளவன், விசிக தலைவர் மற்றும் சிதம்பரம் நாடாளமன்றம் உறுப்பினர், அவர்கள் தலைமையில் 30–01–2026 அன்று அருங்காட்சியக அரங்கம், எழும்பூர் மியூசியம்,

சென்னையில் வெளியிடப்பட்டு ஊர்தோறும் அம்பேத்கர் படிப்பகம் தொடக்கவிழாவும் தொடங்கிவைக்கப்பட்டது.



இவ்விழாவில் மேலும் 5 நூல்களாக தமிழ்நாடு பௌத்தர்கள் சங்கப்பேரவை தலைமை ஒருங்கிணைப்பாளரான முனைவர் சன்னா அவர்களால் தொகுக்கப்பட்ட அம்பேத்கரியம் வழிகாட்டி, ஒதுக்கப்பட்ட மக்கள் (தமிழ், ஆங்கிலம்), மற்றும் இதுவரை வெளிவராத டாக்டர் அம்பேத்கர் அவர்களின் கடிதங்கள் "புரட்ச்சியாளரின் கடிதங்கள்" எனும் தலைப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.



புத்தகத் திருவிழாவாக நடைப்பெற்ற இந்நிகழ்ச்சியில் மேனாள் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் சந்துரு அவர்கள்; இந்திய பொதுவுடைமைக் கட்சியின் மூத்த தலைவர் சி. மகேந்திரன் அவர்கள்; உலக தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப (ஓய்வு) அவர்கள்; தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் மற்றும் முனைவர் சன்னா அவர்களின் வாழ்விணையர் முனைவர் க. சுபாஷிணி அவர்கள்; தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர் மற்றும் விசிக பொதுச்செயலாளர் சிந்தனைச்



செல்வன் அவர்கள் ஆகியோர் நூல்களை பெற்று வாழ்த்துரையாற்றினர்.



# 17. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள்

## க. இணையவழி திசைக்கூடல் நேரலைகள்




கல்வெட்டுகள் காட்டும் வரலாறு — கலந்துரையாடல்

——முனைவர் இரா. கலைக்கோவன் மற்றும் முனைவர் அர.அகிலா
திசைக்கூடல் — 393 [ஜனவரி 24, 2026]
https://youtu.be/mdgE1ThzFjE

———

# உ. இணையவழி இலக்கியக் கூடல் நேரலைகள்





—முனைவர் அரங்க மல்லிகாவின்
"**மணிமேகலையின் பௌத்தப் பேரறம்**":
நூல்திறனாய்வு

—முனைவர் தேமொழி, செயலாளர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
இலக்கியக்கூடல் – 13 [ஜனவரி 31.01.26]
https://youtu.be/aJGAZCsKyZ4


## தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்



ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள்




மக்கள் வரலாறு (3 தொகுதிகள்)



வள்ளுவர் குறள் ஆத்திச்சூடி முறையில்



விண்ணை நோக்கி




தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும்




மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 1



மட்டக்களப்பு



தமிழ்ப் புத்தாண்டு சர்ச்சைகளும் தீர்வுகளும்




கொரியாவில் தமிழ்ச் சுவடுகள்



தமிழர் புலப்பெயர்வு



பொருள்முதல்வாதப் பார்வையில் ஆதிசங்கரரின் அத்வைதம்



இலக்கிய மீளாய்வு




இராஜேந்திர சோழனின் ஒட்ர நாடு வெற்றி




நிலவியல் நோக்கில் கங்கை கொண்ட சோழபுரம் வரலாறு




கணிதவியல் - பொதுக் கட்டுரைகள்



தமிழகத்தில் பௌத்தம்



விளையாடிய தமிழ்ச் சமூகம்



கல்வெட்டில் தேவதாசி




தொல்லியல் நோக்கில் தமிழ்நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்





வரலாற்றில் பொய்கள்


தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்


தமிழ் வலசை


மணிமேகலையின் பௌத்தப் பேரறம்


செம்மொழியும் மின் தமிழும்


Ancient Tamil Corpus: A Key T Understand The Indus Riddle


சங்க இலக்கியம் எனும் சிந்துவெளி திறவுகோல்



தமிழக நிலப்பரப்பில் பாதை மாறிய ஆறுகள்


தமிழக நிலப்பரப்பில் பின்வாங்கிய கடல்களும் கடல்கொண்ட நிலங்களும்


வரலாற்று நிலவியல் நோக்கில் சிதம்பரம் நகரும் நகர்ப்புறமும்



நீலக்கடல் முழுவதும் கப்பல் விடுவோம்


பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் (தொகுதி 2)


பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் (தொகுதி 1)


நக்கீரர் நடைப்பயணம் (நெடுநல்வாடை)


வரலாற்று ஆய்வில் களப்பணிகள்



ராஜராஜனின் கொடை


கொங்குநாட்டுக் கல்வெட்டுகள்


கொங்கு நாட்டுத் தொல்லியல் சின்னங்கள


கிழக்கரை வரலாறு


நாகர் நிலச்சுவடுகள்


அறியப்பட வேண்டிய தமிழகம்


திருவள்ளுவர் யார்?

# தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்

1. Der Kural Des Thiruvalluvar
   By Dr.Karl Graul (First edition 1856 reprinted - 2019) Euro.25

2. Thiruvalluvar's Prose
   By August Fridrich Cammerer(First edition 1803 reprinted - 2019) Euro 25

3. **திருவள்ளுவர் யார்?** (2021)
   *கௌதம சன்னா* ரூ.200

4. **நாகர் நிலச்சுவடுகள் (இலங்கை பயண அனுபவம்)** (2020)
   *மலர்விழி பாஸ்கரன்* ரூ.100

5. **அறியப்பட வேண்டிய தமிழகம்** (2021)
   *தொ. பரமசிவன் நேர்காணலும் கட்டுரைகளும்*
   *தொகுப்பாசிரியர் - முனைவர்.க.சுபாஷிணி* ரூ.80

6. **கீழக்கரை வரலாறு** (2021)
   *எஸ்.மஹ்மூது நெய்னா (இப்போது.காம் இணைபதிப்பு)* ரூ.300

7. **கொங்குநாட்டுக் கல்வெட்டுகள்** (2021)
   *துரை சுந்தரம்* ரூ.160

8. **கொங்கு நாட்டுத் தொல்லியல் சின்னங்கள்** (2021)
   *துரை சுந்தரம்* ரூ.*140*

9. **தொல்லியல் நோக்கில் தமிழ்நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்**(2021)
   *கோ. சசிகலா* ரூ.180

10. **வரலாற்றில் பொய்கள்** (2021)
    *தேமொழி* ரூ.100

11. **விளையாடிய தமிழ்ச்சமூகம்** (2022)
    *ஆ. பாப்பா* ரூ.300

12. **கல்வெட்டில் தேவதாசி** (2022)
    *எஸ் சாந்தினிபி* ரூ.150

13. **ராஜராஜனின் கொடை** (2022)
    *க. சுபாஷிணி* ரூ.180

14. **இலக்கிய மீளாய்வு** (2023)
    *தேமொழி* ரூ.150

15. **கணிதவியல்** (2023)
    *ப. பாண்டியராஜா* ரூ.180

16. **ராஜேந்திர சோழனின் ஒட்ர நாடு வெற்றி** (2023)
    *ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன்* ரூ.90

17. **வரலாற்று ஆய்வில் களப்பணிகள்** (2023)
    *க. சுபாஷிணி* ரூ.120

18. **தமிழகத்தில் பௌத்தம்** (2023)
    *தேமொழி* ரூ.120

19. **நிலவியல் நோக்கில் கங்கைகொண்ட சோழபுரம் வரலாறு** (2023)
*ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன்* ரூ.300

20. **நீலக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்** (2023)
*நரசய்யா* ரூ.150

21. **பொருள்முதல்வாதப் பார்வையில் ஆதிசங்கரரின் அத்வைதம்** (2023)
*அ. கா. ஈஸ்வரன்* ரூ.180

22. **பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் - தொகுதி** 1 (2023)
*ப. பாண்டியராஜா* ரூ.250

23. **பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் - தொகுதி** 2 (2023)
*ப. பாண்டியராஜா* ரூ.250

24. **நக்கீரர் நடைப்பயணம்** (2024)
*ப. பாண்டியராஜா* ரூ.180

25. **தமிழர் புலப்பெயர்வு உலகளாவிய பயணங்கள்-குடியேற்றங்கள்-வரலாறு** (2024)
*க. சுபாஷிணி* ரூ.500

26. **கொரியாவில் தமிழ்ச் சுவடுகள்** (2024)
*நா. கண்ணன்* ரூ.220

27. **வரலாற்று நிலவியல் நோக்கில் சிதம்பரம்-நகரும் நகர்ப்புறமும்** (2024)
*ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன்* ரூ.320

28. **தமிழக நிலப்பரப்பில் பின்வாங்கியகடல்களும் கடல்கொண்டநிலங்களும்** (2024)
*ச. சிங்காநெஞ்சன்* ரூ.140

29. **தமிழக நிலப்பரப்பில் பாதை மாறிய ஆறுகள்** (2024)
*ச. சிங்காநெஞ்சன்* ரூ.120

30. **சங்க இலக்கியம் எனும் சிந்துவெளி திறவுகோல்** (2024)
*தமிழ் மரபு அறக்கட்டளை* ரூ.120

31. **மக்கள் வரலாறு: தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 1** (2024)
*க. சுபாஷிணி* ரூ.200

32. **தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும்** (2024)
*க. சுபாஷிணி* ரூ.180

33. **மட்டக்களப்பு: வரலாறு, சமூகம், பண்பாடு** (2024)
*ஆ.பாப்பா, மு.இறைவாணி* ரூ.280

34. **தமிழ்ப் புத்தாண்டு சர்ச்சைகளும் தீர்வுகளும்** (2024)
*தேமொழி* ரூ.250

35. **தூரக் கிழக்கில் தமிழ் ஆய்வுகள்: கொரியா** (2025)
*நா. கண்ணன், க. சுபாஷிணி, சூ. ஆம்ஸ்ட்ராங்* ரூ.250

36. **விண்ணை நோக்கி இலக்கியத்தில் அறிவியல் செய்திகள்** (2025)
*தேமொழி* ரூ.180

37. **மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 2** (2025)
*க. சுபாஷிணி* ரூ.250

38. **மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 3** (2025)
*க. சுபாஷிணி* ரூ.250

39. **தமிழ் வலசை** (2025)
*சிவ இளங்கோ* ரூ.150

40. **மின்தமிழும் செம்மொழியும்** (2025)
*நா. கண்ணன்* ரூ.*220*

41. **வள்ளுவர் குறள் ஆத்திசூடி முறையில்** (2025)
*தேமொழி* ரூ.50

42. **Ancient Tamil Corpus:A key to understand the Indus Riddle** (2025)
*Tamil Heritage Foundation* ரூ.120

43. **மணிமேகலையின் பௌத்தப் பேரறம்** (2025)
*அரங்கமல்லிகா* ரூ.300

44. **Life and Achievements of Chola Emperor Rajaraja I Redefined** (2025)
*Sundhar Bharadhwaj* ரூ.450

தமிழ் மரபு அறக்கட்டளையின் பதிப்பக நூல்களை சென்னையில். **டிஸ்கவரி புக் பேலஸ்; ஆழி பதிப்பகம்; எமரால்ட் பதிப்பகம்** ஆகிய இடங்களில் நேரில் வாங்கலாம்.
நூல்களை **இணையம் வழியாக** கீழ்க்காணும் தளங்களில் பெறலாம்:

1. https://www.commonfolks.in/books/tamil-heritage-foundation
2. https://wisdomkart.in/books-publication/tamil-heritage-foundation/

**2026 புதிய வெளியீடு: "ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள் அடையாளம் காணுதலும் ஆவணப் படுத்தலும்"**
**முனைவர் க. சுபாஷிணி**



தமிழ் மரபு அறக்கட்டளை
Tamil Heritage Foundation
THF
தமிழர் வரலாற்றுக்கு ஓர் அரண்

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic Preservation of Tamil Heritage Materials
e-BOOK Series

an international NGO initiative to digitize
old Tamil Books and Palm Leaf Manuscripts
visit: http://www.tamilheritage.org/

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள்,
ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி
தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி
மேலும் அறிய: http://www.tamilheritage.org/

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை


சிந்தாமணி
சிலப்பதிகாரம்
மணிமேகலை
வளையாபதி